

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | டிசம்பர் 04, 2014 | புரட்சி 13 | முழக்கம் 47 | விலை: ரூ.3.00


## மேதகு பிரபாகரன் பிறந்த நாள் பதாகை நிறுவியதற்காக காவல்துறையின் கொலை வெறித் தாக்குதலுக்கு உள்ளானார் ‘முழக்கம்’ உமாபதி

# முறையான சிகிச்சை தர நீதிமன்றம் உத்தரவு!

*‘முழக்கம் உமாபதி’க்கு முறையான சிகிச்சைகளை அளித்து அறிக்கை தர வேண்டும் என்று அரசு மருத்துவமனை தலைவருக்கு உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.*

‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ செய்தியாளர் திராவிடர் விடுதலைக் கழகச் செயல் வீரர் ‘முழக்கம்’ உமாபதி, காவல்துறையால் நவம்பர் 26 அன்று கொலைவெறித் தாக்குதலுக்கு உள்ளானதைத் தொடர்ந்து கழக வழக்கறிஞர்கள் துரை. அருண், திருமூர்த்தி, உயர்நீதிமன்றத்தில் நவ.28ஆம் தேதி வழக்கு தொடர்ந்து, அவசர விசாரணைக்கு ஏற்க வேண்டும் என்று நீதிபதியிடம் வலியுறுத்தினர். நீதிபதி வி. இராமசுப்பிரமணியன், வழக்கை விசாரணைக்கு அனுமதித்தார். கொலைவெறித் தாக்குதலுக்கு உள்ளான ‘முழக்கம்’ உமாபதிக்கு தமிழக அரசு ரூ.25 இலட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், கொலைவெறித் தாக்குதல் நடத்திய காவல்துறையினர்மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டிருந்தது. உடனடி நடவடிக்கையாக உரிய மருத்துவ வசதிகளை செய்து தரவேண்டும் என்றும், வழக்கை சி.பி.சி.அய்.டி. விசாரணைக்கு மாற்றி, தாக்குதல் நடத்திய காவல்துறையினரை உடனடி பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து நீதிபதி, இராஜீவ் காந்தி மருத்துவமனை தலைமை மருத்துவ அதிகாரி தலைமையில் (டீன்) மருத்துவர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்து, ‘முழக்கம்’ உமாபதிக்கு தேவைப்படும் சிகிச்சைகளை செய்ய வேண்டும் என்றும், தரப்பட்ட சிகிச்சை, சிகிச்சையின் முன்னேற்றம் குறித்தும், மருத்துவமனையில் ‘முழக்கம்’ உமாபதி அனுமதிக்கப்பட்டபோது அவரது உடல்நிலை குறித்தும், டிசம்பர் 3 ஆம் தேதி நீதிமன்றத்துக்கு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டார். வழக்கு மனுவில் கோரப்பட்டிருந்த ஏனைய பிரச்சினைகள் குறித்து விளக்கம் கேட்டு, காவல்துறை அரசு அதிகாரிகளுக்கு நோட்டீசு பிறப்பிக்க ஆணையிட்டார். வழக்கில் தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல்துறை இயக்குனர், காவல்துறை ஆணையாளர் ஆகியோர் இணைக்கப்பட்டிருந்தனர். மனுவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

“அபிராமபுரம் விசாலாட்சி தோட்டப் பகுதியிலுள்ள ‘டாஸ்மாக்’ மது விற்பனைக் கடையினால் குடியிருப்புப் பகுதியில் வாழும் மக்கள் மிகவும் தொல்லைக்குள்ளாகிறார்கள். நள்ளிரவு வரை அங்குள்ள - மது குடிக்கும் ‘பாரில்’ விற்பனை நடக்கிறது. எனவே கடையை மூடவேண்டும்” என்று திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மக்களை இணைத்து போராட்டம் நடத்தினார்கள். இதனால் பகுதி காவல்துறைக்கு கழகத்தினர் மீது ஆத்திரம் இருந்தது.

இதைத் தொடர்ந்து நவம்பர் 26ஆம் தேதி அப்பகுதி மக்கள் பிரபாகரன் பிறந்த நாளை கொண்டாட பதாகை வைத்தபோது சம்பவங்களை புகைப்படம் எடுக்க, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டின் செய்தியாளர் ‘முழக்கம்’ உமாபதி அங்கே வந்தார். காவல்துறையினர், பிரபாகரன் பதாகையை கிழித்து அகற்றியதை எதிர்த்து பொது மக்கள் சாலை மறியல் செய்ததை உமாபதி படம் பிடிக்க முயன்ற போது, காவல்துறையினர் அவரைப் பிடித்துப் போய் தாக்கியுள்ளனர். அபிராமபுரம் காவல்நிலைய உதவி ஆய்வாளர் இளையராஜா, மற்றொரு உதவி ஆய்வாளர் கலைச் செல்வி, காவலர் வடிவேலு மூவரும் இணைந்து தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று வழக்கு மனுவில் கூறப்பட்டுள்ளது.

### காவல் நிலையத்தில் புகார் மனு

கொலை வெறித் தாக்குதலை நடத்திய மூவர் மீதும் காவல் நிலையத்தில் கழக சார்பில் புகார் தரப்பட்டது. அதைத் தொடர்ந்து குற்றத்தை மூடி மறைக்க முடியாத நிலையில் வேறு வழியின்றி இளைய ராஜா, கலைச்செல்வி, வடிவேலு ஆகிய மூவர் மீதும் பிணையில் வெளிவரக்கூடிய பிரிவுகளான இ.பி.கோ.341 (சட்டத்துக்குப் புறம்பாக தடுத்தல்), 324 (தன்னிச்சையாக செயல்பட்டு காயம் ஏற்படுத்துதல்) என்ற பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு (எப்.அய்.ஆர்.) செய்தனர். பிரிவு 307இன்கீழ் கொலை முயற்சிக்கான வழக்கைப் பதிவு செய்யாமல் காவல்துறை இந்த கண்துடைப்பு நடவடிக்கையை எடுத்துள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்களை பணி இடை நீக்கம் செய்யும் அதிகாரம் காவல்துறை இயக்குனருக்கும், ஆணையருக்கும் இருந்தும், அவர்கள் அதைச் செய்யாமல், இடமாற்றம் மட்டுமே செய்திருப்பதாக கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் ஆகியோர் தெரிவித்தனர்.

# காவல் துறை இளைய ராஜா–கலைச்செல்வி–வடிவேலு மீது கொலை முயற்சி வழக்கை பதிவு செய்!




‘முழக்கம்’ உமாபதி மீது காவல்துறை நடத்திய கொலை வெறித் தாக்குதலைக் கண்டித்து அடுத்தக்கட்ட நடவடிக்கைக் குறித்து ஆராய தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வேல்முருகன் அவசரமாக கூட்டமைப்பின் கூட்டத்தை நவம்பர் 29ஆம் தேதி பகல் 12 மணியளவில் கூட்டினார். வேல்முருகன் தலைமையில் நடந்த கூட்டத்தில் மல்லை சத்யா (ம.தி.மு.க.), வன்னியரசு (விடுதலை சிறுத்தைகள்), பெ.மணியரசன் (தமிழ்த் தேசிய பேரியக்கம்), தியாகு (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), செந்தில் (இளம் தமிழர் இயக்கம்), பாக்கர் (இந்திய தவஹீத்), டி.எஸ்.எஸ். மணி (ஊடகவியலாளர்), குடந்தை அரசு (விடுதலை தமிழ்ப் புலிகள்), வீரலட்சுமி (தமிழர் முன்னேற்றக் கழகம்), அருண்சோரி (தமிழ்நாடு மக்கள் கட்சி), ஓவியர் வீர. சந்தானம், இயக்குனர் மு. களஞ்சியம் மற்றும் எஸ்.டி.பி.அய். உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் பங்கேற்றனர்.

‘முழக்கம்’ உமாபதி மீது நடந்த கொலை வெறித் தாக்குதல் குறித்தும், தொடர்ந்து கருத்துரிமைக்கு தமிழக அரசும் காவல்துறையும் விதித்து வரும் தடைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்தத் தாக்குதல் குறித்து மாநகர காவல்துறை உயரதிகாரிகள், தமிழக அரசு அதிகாரிகளை சந்தித்து, முறையீடு செய்த தகவலை வேல்முருகன் தெரிவித்தார். உரிய நடவடிக்கை எடுப்பதாக காவல்துறை கூறினாலும் உடனடியாக வலிமையான எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும் என்று பலரும் வற்புறுத்தினர். பின்னர் கூட்டமைப்பு சார்பில் செய்தியாளர்களிடம் பேசிய வேல்முருகன், “காவல் துறையினர் மீது கொலை முயற்சி வழக்கை டிசம்பர் 5ஆம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும். இல்லையேல் அடுத்த கட்ட நடவடிக்கைகளை அறிவிப்போம்” என்று அறிவித்தார். தமிழ் ஈழத்துக்காக குரல் கொடுப்போர் மீது காவல்துறை பொய் வழக்குகளைப் போட்டு மிரட்டி வருவதை பல்வேறு நிகழ்வுகளை சுட்டிக்காட்டி விளக்கினார்.

தலையங்கம்

## ‘இராஜா’க்களின் மிரட்டல்

பாரதிய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் என்ற பதவியில் இருக்கும் எச்.ராஜா, “மோடியை கடுமையாக விமர்சித்தால் அவர் செல்லும் இடங்களில் பேசிவிட்டு வைகோ பாதுகாப்பாக திரும்ப முடியாது” என்றும், “வைகோ நாக்கு தடித்து பேசி வருவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்” என்றும் எச்சரிக்கை செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. மோடி அதிகாரத்தில் இருக்கிறார் என்ற ஆணவம்தான், இவர்களை இப்படியெல்லாம் பேச வைக்கிறது போலும்! மோடி அப்படி ஒன்றும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவரும் அல்ல. சார்க் மாநாட்டில் பல்வேறு நாட்டின் அதிபர்கள் பங்கேற்கும் மாநாட்டில், “இராஜபக்சே மீண்டும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்” என்று மோடி, ‘தேர்தல் அரசியலை’ப் பேசியிருப்பது சரியா?

தமிழர்களை இனப்படுகொலை செய்தவர் இராஜபக்சே. ‘மனித உரிமை மீறல்’ குற்றத்தின் கீழ் விசாரிக்கப்பட வேண்டியவர் என்று அய்.நா.வின் கண்டனத்துக்கு உள்ளாகி நிற்கும் மனிதர். அவருக்கு மோடி வாழ்த்துக் கூறுவது பற்றி இந்த ‘இராஜா’க்களுக்கு ஆத்திரம் வரும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. இவர்கள் தமிழினத்தின் எதிரிகள். ஆனால், வைகோவுக்கு இயல்பாகவே கோபம் வெடிக்கிறது. காரணம் அவர் தமிழர்.

பார்ப்பனர்களுக்கென்று இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் கிடையாது. ‘அவாள்’களின் சமஸ்கிருதம் எந்த ஒரு மாநிலத்துக்கும் தாய்மொழியும் கிடையாது. ‘இந்திய தேசியம்’ என்ற போலி கட்டமைப்புக்குள் பதுங்கிக் கொண்டு நிற்கும் இவர்கள், அவ்வப்போது, தமிழின உணர்வுகள் வெளிப்படும்போது நடுங்கிச் சாகிறார்கள். மத்தியில் ஆட்சி அதிகாரம் வந்த பிறகு, தங்களின் பூணூல்களுக்கு குண்டு துளைக்காத துப்பாக்கிக் கவசம் கிடைத்து விட்டதாக குதூகலிக்கிறார்கள்.

சுப்ரமணியசாமியும் இப்படித்தான் தன்னை ‘பிராமணர்’ என்றும், மோடி எனும் இராஜாவுக்கு தானே ‘குரு’வாக இருப்பதாகவும் கூறிக் கொண்டு வருகிறார். தமிழ்நாட்டில் தமிழ் ஈழத்துக்கு ஆதரவாகவும் மரண தண்டனைக்கு எதிராகவும் பேசி வரும் தமிழர்களை ‘தேச துரோகிகள்’ என்றும், தமிழ்நாட்டில் ‘மாவீரர் நாள்’ நடத்துவோரை தேசப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும் என்றும் பிதற்றுகிறார். எல்லாவற்றுக்கும் மேலாக இராஜபக்சேவுக்கு இந்தியா ‘பாரத ரத்னா’ விருது வழங்க வேண்டும் என்றும் வெளிப்படையாக பேசுகிறார்.

எச். ராஜா–சுப்ரமணியசாமி போன்ற பார்ப்பனர்கள், இப்படி வெளிப்படையாக பார்ப்பன ‘நஞ்சை’ கக்குவதை நாம் வரவேற்கிறோம். அப்போதுதான் “இப்போதெல்லாம் பார்ப்பனர்கள் எதிரிகள் இல்லை” என்று குதர்க்கம் பேசுவாரின் கண்கள் திறக்கும் என்று கருதுகிறோம். ஒரு காலத்தில் தங்களின் ‘அக்கிரகாரத்தில்’ பிற சமூகத்தினர் நடப்பதற்கே தடைபோட்ட கூட்டம் இது. அகில இந்திய காங்கிரஸ் கட்சி மாநாடுகளிலே தங்களுக்கென தனி சாப்பிடம் இடம் வேண்டும் என்று கேட்டவர்கள். பிரிட்டிஷ்காரன் தொடர் வண்டியை அறிமுகப்படுத்தியபோது, ‘பிராமணர்களுக்கு’ மட்டும் தனிப்பெட்டி ஒதுக்க வேண்டும் என்று மனு போட்டவர்கள். இந்த ‘பிறவி இறுமாப்பு’ இப்போது அதிகாரம் வந்துவிட்டது என்ற நினைப்பில் மீண்டும் தலைதூக்குவதையே இவர்களின் பேச்சுகளில் எதிரொலிக்கிறது.

குஜராத்தில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்களை இனப்படுகொலை செய்தவர்தான் இந்த மோடி என்பதை எவரும் மறந்துவிட முடியாது. இஸ்லாமியர் இனப்படுகொலையை தடுக்காத மோடியை “ரோம் பற்றி எரியும்போது பிடில் வாதித்த நீரோ மன்னருடன்” உச்சநீதிமன்றமே ஒப்பிட்டதை “இராஜா”க்கள் மறந்துவிட வேண்டாம்.

தமிழ்நாட்டில் தமிழர்களுக்காக இயக்கம் நடத்திக் கொண்டு, தமிழினத்துக்காகவே உழைக்கின்ற தலைவர்கள் வரிசையில் வைகோவுக்கு முக்கிய இடம் உண்டு. அரசியலில் மாறுபாடுகள் இருக்கலாம்; ஆனால், சுப்ரமணியசாமி, எச்.ராஜா போன்ற அன்னிய இனத்தவர் மிரட்டினால் தமிழினம் கட்சி மாறுபாடுகளைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரே களத்தில் வந்து நிற்கும்.

எச். ராஜாக்களின் ஈனக் குரலுக்கு எதிராக தமிழகத் தலைவர்கள் பலரும் வெளியே வந்து கண்டனத்தைப் பதிவு செய்து வருகிறார்கள். இதுதான் பெரியாரின் தமிழ்நாடு என்பதை இந்த அரைவேக்காட்டுப் பார்ப்பனர்கள் புரிந்து கொள்ளட்டும்.

பார்ப்பனரல்லாத தமிழர்கள் பார்ப்பன எதிர்ப்பு நீரோட்டத்தில் தடம் புரளாமல் பயணிக்க இத்தகைய பேச்சுகளை இந்தப் பார்ப்பனர்கள் அவ்வப்போது உதிர்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம். அப்போதுதான் அண்ணா கூறியதுபோல் ‘விதைக்காது விளையும் கழனிகளின்’ உண்மை முகம் பச்சையாக வெளியே தெரியும்!

# கொலை வெறித் தாக்குதல்: நடந்தது என்ன?



நவம்பர் 26ஆம் நாள் மேதகு பிரபாகரன் பிறந்த நாளையொட்டி மயிலைப் பகுதி கழகத் தோழர்களும் பகுதி வாழ் பொது மக்களும் இணைந்து மேதகு பிரபாகரனுக்கு 60 ஆவது பிறந்த நாள் வாழத்துக் கூறும் பதாகையை நிறுவியபோது காலை 9 மணியளவில் பிரச்சினைகள் தொடங்கின. பதாகையை நிறுவக் கூடாது என்று தடுத்த உதவி ஆய்வாளர் இளையராஜா, உதவி ஆய்வாளர் கலைச்செல்வி மற்றும் காவலர் வடிவேலு பதாகையைப் பிடுங்கி வீசி அதை கிழிக்கத் தொடங்கினர். அப்போது அங்கே இருந்த காவல் ஆய்வாளர் சீனிவாசன் என்பவரே, உதவி ஆய்வாளர்களின் இந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை விரும்பாமல் அதை ஏன் கிழிக்கிறீர்கள் என்று எடுத்துக் கூறியும், உதவி ஆய்வாளர்கள் அதைப் புறக்கணித்து, ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் இறங்கினர். பகுதி வாழ் பொது மக்கள், பெண்கள், இதைத் தட்டிக் கேட்டதால் ஆத்திரமடைந்த இளையராஜா, கலைச்செல்வி, வடிவேலு மூவரும் பெண்களைப் பிடித்து கீழே தள்ளி இழிவாகப் பேசவே அங்கே புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்த உமாபதி, பெண்கள் மீது ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? என்று கேட்டார். ஏற்கெனவே இந்தப் பகுதியிலுள்ள ‘டாஸ்மாக்’ மதுபானக் கடையால் குடியிருப்பில் வாழும் மக்களுக்கு நேரிடும் தொல்லைகளைக் கண்டித்து பொது மக்களுடன் கழகத் தோழர்கள் கடையை மூடக் கோரி சாலை மறியல் செய்துள்ளனர்.

நள்ளிரவு 10 மணிக்கு மேலும் அங்கே உள்ள ‘பார்’ செயல்பட காவல் துறை அனுமதித்துக் கொண்டிருந்தது, இதேபோல் மயிலாப்பூர் சாய்பாபா கோயில் நிர்வாகம். ஏழைக் குழந்தைகள் படித்து வரும் பள்ளியை இடித்து கோயிலை விரிவாக்கம் செய்ய முயன்றதை எதிர்த்தும் கழகத் தோழர்கள் பொது மக்களோடு இணைந்து போராடினர். இதனால் கழகத்தினர் மீது ஆத்திரம் கொண்டிருந்த காவல்துறை, மேதகு பிரபாகரன் பிறந்த நாள் பதாகை வைக்கும் நிகழ்வைப் பயன்படுத்தி, பழிவாங்க திட்டமிட்டது. பொது மக்கள் எதிர்ப்புக்கிடையே ‘முழக்கம்’ உமாபதியை வலுக்கட்டாயமாக தூக்கி, காவல்துறை வாகனத்தில் ஏற்றி தங்களது சரகத்துக்கு வெளியே உள்ள கோட்டூர்புரம் காவல் நிலையத்துக்கு கொண்டுபோய் 3 மணி நேரத்துக்கும் மேலாக இளைய ராஜா, கலைச்செல்வி, வடிவேலு மூவரும் சேர்ந்து கொலை வெறித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

உமாபதியை பிடித்துச் சென்ற அபிராமபுரம் பகுதி காவல்நிலையத்தில்தான் வைத்திருப்பார்கள் என்று கருதிய சென்னை மாவட்ட கழகச் செயலாளர் உமாபதி, மாவட்ட தலைவர் ஜான் உள்ளிட்ட தோழர்கள் உடனே அபிராமபுரம் காவல் நிலையம் விரைந்தனர். அங்கே இருந்த உதவி ஆணையர், தோழர்களுடன் நீண்ட நேரம் அமைதியாக பேச்சு வார்த்தை நடத்தினார். ‘முழக்கம்’ உமாபதி எங்கே? என்று கேட்டபோது, ஏதேதோ சமாதானம் கூறிக் கொண்டிருந்தார். சில மணி நேரங்களுக்குப் பிறகு, இரத்தம் சொட்ட சொட்ட நடக்க முடியாத நிலையில் மூன்று காவல்துறையினரும் உமாபதியை அழைத்து வந்ததைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்த தோழர்கள், 3 காவல்துறையினரை கைது செய்யக் கோரி, காவல் நிலையத்தை முற்றுகையிட்டும் சாலை மறியல் செய்தும் போராட்டம் நடத்தினர். தொடர்ந்து உமாபதியை இராயப்பேட்டை மருத்துவமனைக்கு காவல்துறை கொண்டு போனது. தோழர்கள் இராயப்பேட்டை விரைந்தனர்.

இராயப்பேட்டையிலும் கொலை வெறித் தாக்குதல் நடத்திய காவல்துறையைக் கைது செய்யக் கோரி சாலை மறியல் செய்தனர். கழக வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி மற்றும் வழக்கறிஞர்கள், மார்க்ஸ் ரவீந்திரன், சசிகுமார், எம்.மணிவண்ணன், நெப்போலியன், ஞானசேகரன் ஆகியோர் விரைந்து வந்தனர். உயர் அதிகாரிகள் தாக்கிய காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து, மறியலை கைவிட்டு அங்கிருந்து, காவல்துறையைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஊர்வலமாக இராயப்பேட்டையில் உள்ள பெரியார் படிப்பகத்தை வந்தடைந்தனர்.

### பிரபாகரன் பிறந்த நாள்

உணர்ச்சிகரமான இந்த சூழலில் பிரபாகரன் படம் எழுதப்பட்ட பதாகையை வி.எம். சாலையில் வைத்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் ஈழ விடுதலை ஒலி முழக்கங்களை எழுப்பி ‘கேக்’ வெட்டப்பட்டது. பெருமளவில் மக்கள் கூட்டம் திரண்டு வந்திருந்தது.

இதற்கிடையே இராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ‘முழக்கம்’ உமாபதியை மருத்துவமனையிலிருந்து வீட்டுக்கு அனுப்ப, காவல்துறை அழுத்தம் தரும் செய்தியறிந்து பொதுச் செயலாளர் மற்றும் தோழர்கள் மருத்துவமனை விரைந்தனர். மருத்துவ அதிகாரியை சந்தித்து சிகிச்சையைத் தொடர வேண்டும் என்று தோழர்களும், வழக்கறிஞர்களும் வலியுறுத்தினர். உடல் நிலை மோசமடைந்த நிலையில் ‘ஸ்கேன்’ எடுக்க வேண்டியிருப்பதால், இராயப்பேட்டை மருத்துவர்கள் உடனடியாக இரவு 8 மணியளவில் இராஜீவ் அரசு பொது மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு ‘ஸ்கேன்’ எடுக்கப்பட்டது. விடியற்காலை 5 மணியளவில் காவல்துறையின் அழுத்தத்தால் ‘முழக்கம்’ உமாபதி, நடக்கக்கூட முடியாத நிலையில் மருத்துவமனையிலிருந்து திடீரென்று விடுவிக்கப்பட்டார். செய்தியறிந்த தோழர்கள், கழக வழக்கறிஞர்கள் உடனடியாக மருத்துவமனை விரைந்து தலைமை மருத்துவ அதிகாரியை சந்தித்து முறையிட்டனர். மருத்துவமனையில் தோழர்கள், உணர்வாளர்கள் என்று பெரும் கூட்டம் கூடி நின்றது. தலைமை மருத்துவ அதிகாரி, தொடர்புடைய மருத்துவப் பிரிவு பொறுப்பாளர்களை அழைத்து எச்சரித்து தன்னுடைய அனுமதியின்றி ‘முழக்கம்’ உமாபதியை விடுவிக்கக் கூடாது என்றும், உரிய சிகிச்சைகளை செய்யுமாறும் உத்தரவிட்டார்.

உமாபதி தாக்கப்பட்ட காயங்களோடு இணைய தளங்களிலும் முகநூல்களிலும் வெளிவந்த படம் நாடெங்கும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியது. முகநூல்களில் நூற்றுக்கணக்கில் படங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் அதிர்ச்சியடைந்தனர். உயர்நீதிமன்றத்தின் ஆணையைத் தொடர்ந்து ‘முழக்கம்’ உமாபதி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று தேறி வருகிறார்.

– நமது செய்தியாளர்

# தாக்குதலைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டங்கள்



சேலம்



திருச்செங்கோடு




மயிலாடுதுறை




ஈரோடு

'முழக்கம்' உமாபதி மீதான கொலை முயற்சித் தாக்குதலைத் தொடர்ந்து, "தாக்குதல் நடத்திய இளைய ராஜா, கலைச்செல்வி, வடிவேலு ஆகிய மூவர் மீதும் கொலை முயற்சி வழக்கைப் பதிவு செய்" என்ற கோரிக்கையை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தியது. சேலம், நாமக்கல், கிருட்டிணகிரி, ஈரோடு, மன்னார்குடி, மயிலாடுதுறை, திருச்சி, திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் எழுச்சியுடன் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

### திருச்செங்கோட்டில்

நாமக்கல் மாவட்ட கழகத்தின் சார்பில் திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு (நகர காவல் நிலையம் எதிரே) மாவட்ட செயலாளர் மா.வைரவேல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் தமிழ் புலிகள், அருந்தமிழர் பேரவை, விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி, தந்தை பெரியார் தி.க., மறுமலர்ச்சி தி.மு.க. மற்றும் கழக ஆதரவாளர்கள் என 60க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் சாமிநாதன், திருச்செங்கோடு நகர தலைவர் சோம சுந்தரம் இருவரும் காயக்கட்டு ஒப்பனையோடு கலந்து கொண்டது மக்களிடம் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

### மன்னையில்

மன்னார்குடியில் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய கழகத்தினர் மீது போலீசார் வழக்கு தொடர்ந்துள்ளனர். மன்னார்குடி பஸ் நிலையம் அருகே கழகம் சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தியதாகக் கூறி கழக மாவட்ட செயலாளர் காளிதாசு, ஒன்றிய செயலாளர்கள் மன்னார்குடி சேரன் ரமேஷ், நீடாமங்கலம் நல்லிக்கோட்டை முருகன், வலங்கைமான் செந்தமிழன் உள்பட 15 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

### சேலத்தில்

கொலைவெறித் தாக்குதல் நடத்திய காவல்துறை யைச் சார்ந்த இளையராஜா, கலைச்செல்வி, வடிவேலு மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வற்புறுத்தி சேலத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகே நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு கிழக்கு மாவட்ட கழகத் தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். மேற்கு மாவட்ட கழகத் தலைவர் சூரியகுமார் முன்னிலை வகித்தார். கழகத் தோழர் டைகர் பாலன், வழக்கறிஞர் ஆனந்த ராஜ் (ம.தி.மு.க.), பூமொழி (மக்கள் உரிமை இயக்கம்), பிரதாபன் (அருந்ததியர் மக்கள் இயக்கம்), அண்ணாத் துரை (அம்பேத்கர் மக்கள் இயக்கம்), தங்கராசு (த.பெ.தி.க.), சிவப்பிரியன், பிந்து சாரன் (தமிழ்த் தேசிய பேரியக்கம்), மாரியப்பன், ஜெகதீசுவரன் (தமிழ்நாடு மாணவர் பேரவை), கண்ணன் (பகுஜன் சமாஜ் கட்சி) ஆகியோர் காவல் துறையின் கொலைவெறியைக் கண்டித்து கண்டன உரையாற்றினர். மாநகரப் பொறுப்பாளர் பாலு நன்றி கூறினார்.

## உமாபதிக்கு தலைவர்கள் நேரில் ஆறுதல்

'முழக்கம்' உமாபதியை மருத்துவமனையில் தோழர்களும் உணர்வாளர்களும், ஆதரவாளர்களும், ஊடகவியலாளர்களும் சந்தித்து ஆறுதல் கூறி வருகின்றனர். வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், தமிழ் தேசிய முன்னணித் தலைவர் பழ. நெடுமாறன், தமிழ்த் தேச பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், விடுதலை சிறுத்தைகள் வன்னியரசு, விடுதலை தமிழ்ப் புலிகள் குடந்தை அரசன், இந்திய தவ்ஹித் தலைவர் பாக்கர், இயக்குனர் களஞ்சியம், காஞ்சி மக்கள் மன்றம் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த தோழர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். பல்வேறு தொலைக்காட்சி விவாதங்களில் தோழர்கள் தியாகு சுப. வீர பாண்டியன், ஆரூர் நிவாஸ் ஆகியோர் கொடூரமான தாக்குதலை அழுத்தமாகப் பதிவு செய்தனர். 'நியூஸ் 7', 'கலைஞர்', 'சன்', 'சத்தியம்' உள்ளிட்ட தொலைக்காட்சிகள் செய்தியை பேட்டிகளோடு ஒளிபரப்பின. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, ஈரோட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில், தாக்குதலுக்கு கடும் கண்டனத்தைப் பதிவு செய்தார்.

### மனித உரிமை ஆணையம்; முதல்வர் தனிப் பிரிவுக்கு மனு

காவல்துறையைச் சார்ந்த இளையராஜா, கலைச்செல்வி, வடிவேலு ஆகியோர் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, மனித உரிமை ஆணையம், அரசு தலைமைச் செயலாளர், காவல்துறை இயக்குனர் மற்றும் முதல்வர் தனிப்பிரிவுக்கு பதிவுத் தபால் வழியாக 'முழக்கம்' உமாபதி மனுக்களை அனுப்பி வைத்துள்ளார்.

## 'பெரியார் குருதிக் கொடை மையம்'


'பெரியார் குருதிக் கொடை மையம்' நாமக்கல் மாவட்டத்தில் தொடர்ந்து குருதி கொடை வழங்கி உயிர் காக்கும் பணியாற்றி வரும் அனைத்து இரத்ததான மையங்கள் மற்றும் தன்னார்வ குருதி கொடையாளர்களையும் அழைத்து சிறப்பிக்கும் நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட நிர்வாகத்தால் நடத்தப்படும். இந்த ஆண்டு நாமக்கல்லில் உள்ள கோஸ்டல் ரெஷிடென்ஸி விடுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு நம் கழகத் தோழர்களால் தொடங்கி நடத்தப்பட்டுவரும் 'பெரியார் குருதிக் கொடை மையம்' தோழர்கள் மா.வைரவேல், து.சதீசுகுமார், இரா.பிரகாசு, ச.சீனிவாசன், விஜயகாந்த் ஆகிய ஐந்து பேர் தன்னார்வ கொடையாளராக தேர்வு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியரால் பதக்கமும், சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதுவரை 'பெரியார் குருதிக் கொடை மைய' த்தின் சார்பில் 170 பேர் குருதி கொடை வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கது.

DATE OF PUBLICATION 03.12.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# பெரியார் பார்வையில் தேசியம் – மொழி – கலாச்சாரம்!

**எம்.எஸ்.எஸ். பாண்டியன்**



### யார் வரலாறு?

இந்தியாவின் பண்டைய இலக்கியங்கள் மட்டுமல்ல, தேசியவாதிகளால் முன்னிறுத்தப்படும் இந்தியாவின் ஆயிரக்கணக்கான ஆண்டு வரலாறும் கூட மேட்டுக்குடியினரின் ஆதிக்க வரலாறே என்றார் பெரியார். மேல் சாதியினர், தங்கள் தலைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழும் சவால்களைக் கொடுமையாக அடக்குவதும், முடியாத கட்டத்தில் எதிரிகளோடு இணங்கிப் போவதுமே இவ்வரலாறு என்றுரைத்தார். இந்த வரலாற்றை இந்தியாவின் பழம்பெருமையெனத் தொடர்ந்து சொல்லி வருவதன் மூலம் நிகழ்காலத்திலும் அடித்தட்டு மக்களை அடக்கிவைக்க முடிகிறது என்பது பெரியாரின் கருத்து. பழமை மறையவில்லை; இன்றும் உயிர்த் துடிப்புடன் இருக்கிறது; எல்லோருக்கும் சுதந்திரம், சமதர்மம் என்பதை மறுக்கிறது; எனவே தற்சார்புடைய குடியுரிமை வழங்கும் தேசம் உருவாக வேண்டுமெனில், பழமையுடன் போராட வேண்டும் என்பது அவரது அரசியல் நோக்கு.

### பகுத்தறிவு ஒரு நெடும் பயணம்!

மானுட விடுதலை அடிப்படையிலான தேசிய உருவாக்கம் முடிவற்றதொரு தொடர் போராட்டமே என்பதுபோல், பகுத்தறிவு வாதமும் முடிவற்ற மாற்றங்களைக் காலந்தோறும் எதிர்கொள்ளும் என்பதை அவர் மனம் கொண்டிருந்தார். "பகுத்தறிவு என்று சொல்வது மாறிமாறி வருவதாகும். இன்று நாம் எவை எவை அறிவுக்குப் பொருத்தமானவை என்று எண்ணுகிறோமோ அவை நாளைக்கு மூடப் பழக்க வழக்கங்கள் எனத் தள்ளப்படலாம் அதுபோலத்தான், நமது பின்னோர்கள் என்னைக் குறித்துக்கூட ஒருகாலத்தில், 'இராமசாமி என்ற மூடக் கொள்கைக்காரன் இருந்தான்' என்றும் கூறலாம். அது இயற்கை; மாற்றத்தின் அறிகுறி: காலத்தின் சின்னம்" என்றார் பெரியார்.

### பெரியாரின் நவீனத்துவம்

தன்னுடைய சமத்துவம் அடிப்படையிலான தேசியத் தேடலுக்குப் பயன்படாத, இந்திய / தமிழ்ப் பழமை பெரியாரைப் பரிதவிக்கச் செய்யவில்லை. மாறாக, தன்னுடைய தேசியத் தேடலைப் பழமையிலிருந்து விடுத்து, எதிர்காலத்தில் நிலைகொள்ள வைத்தார். "மாற்றம் என்பது தவிர்க்க இயலாதது; அதை யாராலும் தடுக்க முடியாது" என்பது பெரியாரது உறுதியான நிலைப்பாடு.

### யார் போராடுவது?

அநீதிக்கும் அடிமைத்தனத்துக்கும் ஆளானவர்கள் சுயமரியாதையால் உந்தப்பட்டு, தாம் தமக்காகவே கிளர்ந்து எழும்போதுதான் விடுதலை கிடைக்கும் என்பது பெரியாரின் நம்பிக்கை. பெண் விடுதலைக்காக ஆண்கள் மட்டுமே குரல் கொடுப்பதை ஏற்காத அவர், பெண்கள்தான் அதற்கான அரசியலைத் தங்கள் கையிலெடுத்துப் போராட வேண்டும் எனக் குறிப்பிடுவதைச் சான்றாகக் காட்டலாம்: "எங்காவது பூனைகளால் எலிகளுக்கு விடுதலை உண்டாகுமா?" என்றார் பெரியார்.

### ஏன் எதிர்த்தார்?

கடவுள், மதம், காந்தி, காங்கிரஸ், பார்ப்பனர்கள் அனைத்தையும் ஒருசேர பெரியார் எதிர்த்தமைக்குக் காரணம், உருவாகி வந்த இந்திய தேசத்தில் சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டோர்கள், பெண்கள் போன்ற ஒடுக்கப்பட்டவர்கள் சமமான குடியுரிமையைப் பெறுவதற்கு இவை தடையாக உள்ளன என்பது பெரியாரின் புரிதலாகும். ஒரு தேசத்தின் அரசியல் கட்டமைப்பில் சமமான, தற்சார்புடைய குடியுரிமைதான் அடித்தளம் என்று அவர் கருதினார்.

### சுயமரியாதையை மீளப்பெறுதல்

மாற்றம் என்பது வரலாற்றில் தன்னிச்சையாக நிகழ்வதில்லை; ஒருமுகப்பட்ட மனித முயற்சியை, தலையீட்டை அது வேண்டுகிறது. எனவே, கடந்த காலத்தில் ஒடுக்கப்பட்டோர் இப்போது செயலாற்றல் உள்ளவர்களாக மாற வேண்டும். அதன்மூலம் இழந்துபோன சுயமரியாதையை மீளப்பெறுதல் வேண்டும். சுயமரியாதையை நாம் பெற்றுவிட்டால், சுதந்திரம் கண்ணிமைக்கும் நேரத்தில் கிடைத்துவிடும்; மனிதனின் பிறப்புரிமையான சுதந்திரத்தைப் பெற சுயமரியாதை ஒன்றே வழி என்பது பெரியாரின் கருத்து.

### பெரியாரின் மொழி

தேச உருவாக்கத்தின் மையக் கூறான மொழிபற்றிய அவரது கருத்தும் இந்தப் பகுத்தறிவு வயப்பட்ட விமர்சனத்துக்கு உட்பட்டதே. மொழி என்பது பகுத்தறிவுக் கருத்துக்களுக்கு ஏற்றதாக, சமதர்மம், சுதந்திரம் ஆகியவற்றை வளர்ப்பதற்காக அமைய வேண்டும். துளசி இராமாயணம் போன்ற பகுத்தறிவுக்குப் புறம்பான நூல்களைப் படிக்கவே இந்தி உதவும் என்ற வாதத்தை முன்வைத்து, பெரியார் இந்தியைத் தாக்கினார். ''சொர்க்கத்துக்குப் போக இந்தி உதவலாம். ஆனால், அதற்குள் சொர்க்கம் போய்விடும்'' என்றார். இந்தியோடு ஒப்பிடுகையில் தமிழ் சிறந்தது என்றார். எனினும், அதிலும் குறைபாடு உண்டென்பதை சுட்டிக் காட்டத் தவறவில்லை. பகுத்தறிவுத் தளத்திலிருந்து தமிழையும் மதத்தையும் பிரிக்க வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது. "எனது பாஷை, எனது தேசம், எனது மதம் என்பதற்காகவோ, எனது பழைமையானது என்பதற்காகவோ ஒன்றையும் நான் பாராட்டுவதில்லை" என்றார்.

### கடவுளா, கல்லா?

மதம் சார்ந்த தொன்மங்கள் (புராணக் கதைகள்) சூத்திரர்களையும் தாழ்த்தப்பட்டவர்களையும் பெண்களையும் இழிவுபடுத்தப் புனையப்பட்ட பொய்ம்மைகள், கற்பனைகள் என்ற பெரியார், அவற்றைப் பகுத்தறிவு சார்ந்த விமர்சனத்துக்கு உட்படுத்தினார். 1924இல் வைக்கம் கோயிலில் உள்ள சிலையை, 'துணி வெளுக்க உதவும் சாதாரணக் கல்' என்று விவரித்தார். இவ்வகை விமர்சனம், வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது.

### எல்லையற்ற தேசம்

தேசியம் என்பது ஒரு தேடலே அன்றி, ஒரு முடிவான உருவாக்கம் அல்ல எனும் கருத்தின் அடிப்படையில்தான், பெரியார் தான் தேடிய தேசத்துக்குப் புவியியல் எல்லைகளைத் தெளிவாக வகுப்பதுபற்றி அதிக அக்கறை காட்டவில்லை. தாம் கருதியுள்ள தேசத்தில் இந்தியாவிலுள்ள சூத்திரர் எல்லோருக்கும் இடமுண்டு என்று தெரிவித்தார். வருணாசிரமத்தை மறுக்கும் ஜப்பானியரும் கூட பெரியாருக்கு திராவிடர்களே. இவ்வாறாக, அவருடைய தேசம், மொழி, கலாச்சார அடிப்படையில் புவியியல் எல்லைகளை வகுக்க மறுத்தது. எல்லைகளை மீறி ஒடுக்கப்பட்டோர் இணைந்து விடுதலை தேடுவதே அதன்கூறு!

(முடிவெய்திய பேராசிரியர் எம்.எஸ்.எஸ். பாண்டியனின் 'தேசியப் பழமைவாதத்தை மறுதலித்தல் பெரியாரின் அரசியல் கருத்தாடலில் தேசம்' என்ற ஆங்கிலக் கட்டுரையிலிருந்து சில பகுதிகள்.)

நன்றி: 'தமிழ் இந்து'

## வினாக்கள்... விடைகள்...!

+ *சென்னை சேலையூரில் பாகனை மிதித்துக் கொன்ற அகோபில மடத்தின் யானைக்கு மதம் பிடித்திருந்தது.* – 'தமிழ் இந்து' செய்தி

*தமிழ்நாட்டில் பா.ஜ.க. வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது உண்மைதான் போலிருக்கிறது.*

+ *மோடியை கடுமையாக விமர்சித்தால் வைகோ பாதுகாப்பாக திரும்ப முடியாது.* – எச். ராஜா

*ஆமாம்! எதுக்கும் வைகோ எச்சரிக்கையா இருப்பதுதான் நல்லது. மனுஷன் தனது கட்சி சாமியார்களப் புடிச்சு பில்லி சூன்யத்தை ஏவி விட்டாலும், விட்டுடுவாறு!*

+ *அரியானா சாமியார் ராம்பாலை கைது செய் யஅரசுக்கு செலவு ரூ.26 கோடி.* – செய்தி

*இதுக்கெல்லாம் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செஞ்சிடுங்க... அப்பத்தான், நிதி தட்டுப்பாடு இல்லாம சாமியார்களை பிடிக்க முடியும்!*

+ *ஆஸ்திரேலியாவில் மோடி பங்கேற்ற நிகழ்வில் இருந்த இந்திய வரைபடத்தில் காஷ்மீர் இடம்பெறவில்லை.* – செய்தி

*இனிமே வெளிநாடு போகும்போது, 'கீதை'க்குப் பதிலாக இந்திய வரைபடத்தையே எடுத்துட்டுப்போய் பரிசாக கொடுத்துடுறதுதான் நல்லது!*

+ *புனேயில் கோட்சேயை பாராட்டி, ஆர்.எஸ்.எஸ். நடத்த இருந்த நாடகத்துக்கு காங்கிரஸ் எதிர்ப்பு.* – செய்தி


*ஒன்றும் பிரச்சினை இல்லை. நாடகத்தை அப்படியே சமஸ்கிருதத்துல மாத்திட்டா, ஒருத்தனுக்கும் புரியாது. அப்போ, எவன் எதுப்பான்னு பாத்துடுவோம்!*

+ *இந்தியாவில் இரயில் நிலையங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்படும்.* – மோடி

*பயணிகளின் கனிவான கவனத்துக்கு! நாக்பூரிலிருந்து நாகூர் வரை செல்லும் கோட்சே விரைவு இரயில் இன்னும் சற்று நேரத்தில் அம்பானி பிளாட்பாரத்தில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 4th December 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | டிசம்பர் 11, 2014 | புரட்சி 13 | முழக்கம் 48 | விலை: ரூ.3.00

## கழகச் செயல்வீரர்களே!

'புரட்சிப் பெரியார் முழக்கம்' உறுப்பினர் சேர்க்கை தொடங்கி விட்டீர்களா?

'புரட்சிப் பெரியார் முழக்கம்' கடந்த 13 ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. நான்கே பக்கங்களில் வெளிவரும் அந்த ஏடு, காலத்தின் அறை கூவலுக்கு உறுதியாக முகம் கொடுத்து வருகிறது என்ற உண்மை, அதன் வாசகர்களுக்குத் தெரியும்.

பெரியார் எழுத்து – பேச்சுகளை 'குடிஅரசு' தொகுதிகள் வழியாக நாம் வெளியிட முயன்றபோது அதற்கு தடைபோட முயன்றவர்கள் முன் வைத்த வாதங்களை முனை மழுங்கடித்தது 'புரட்சிப் பெரியார் முழக்கம்'. பெரியாருக்கு எதிராக திசை திருப்பும் வாதங்களையும் வரலாற்றுத் திரிபுகளையும் முன் வைக்கும் சக்திகளின் முகத் திரையைக் கிழித்துக் காட்டி வருவதும் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' தான்.

எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் தன்னை ஒப்படைத்துக் கொண்டு விடாமல் எந்த முகாமிலிருந்து பெரியாரிய எதிர்ப்புக் குரல் வந்தாலும் அதை உறுதியாக எதிர்ப்பதிலும் எங்கேயிருந்து பெரியாரியத்தின் ஆதரவுக் குரல் வந்தாலும் தயக்கமின்றி வரவேற்பதிலும் முன்னிற்பதும் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' தான்.

கழகத்தின் செயல்பாடுகளை பதிவு செய்யும் ஒரே வரலாற்று ஆவணமும், இதுதான். இந்த ஏட்டைப் பரவலாகக் கொண்டு செல்வது கழகத் தோழர் ஒவ்வொருவரின் கடமையல்லவா?

கழகச் செயல்வீரர்களே! எந்த மாவட்டம், எவ்வளவு எண்ணிக்கையில் உறுப்பினர்களை சேர்க்கப் போகிறது என்பதை பார்க்கப் போகிறோம்! இயக்கத் தோழர்களின் செயல்பாடுகளுக்கு இது ஓர் அளவுகோல்!

இதோ, எங்கள் மாவட்டம் மற்ற மாவட்டங்களை விஞ்சிவிட்டது என்ற பெருமையை தட்டிச் செல்ல எண்ணிக்கை இலக்கை உயர்த்தி, களமிறங்குங்கள்!

டிசம்பர் 15 ஆம் தேதியோடு சந்தா சேர்ப்பு இயக்கம் நிறைவடைகிறது என்பதை மறந்து விடாதீர்கள்!

விரைவுப்படுத்துங்கள்!

## 'இராமனு'க்குப் பிறந்தவர்களே நாட்டை ஆளவேண்டும் என்போரே!

# 'இராமன்' எப்படி பிறந்தான் தெரியுமா?

மத்திய இணை அமைச்சராக இருக்கும் சாத்வி நிரஞ்சன் ஜோதி என்ற உத்தரப்பிரதேசத்தைச் சார்ந்த பெண் சாமியார், டெல்லியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில், "டெல்லியை இராமனுக்குப் பிறந்தவர்கள் ஆட்சி செய்ய வேண்டுமா? அல்லது முறை தவறிப் பிறந்தவர்கள் ஆட்சி செய்ய வேண்டுமா?" என்று பேசியுள்ளார். இதற்கு நாடாளுமன்றத்திலும் நாடு முழுதும் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. 'இராமனுக்குப்' பிறந்தவர்கள்தான் நாட்டின் நல்லாட்சிக்குத் தகுதியானவர்கள். நாட்டின் உண்மையான குடிமக்கள் அவர்கள்தான் என்ற இந்தக் கருத்து, ஏதோ, இந்தப் பெண் அமைச்சரின் உணர்ச்சிகரமான பேச்சு என்றோ, மதவெறித் தனத்தின் வெளிப்பாடு என்றோ கருதிடக் கூடாது.

இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள், 'இராமனை' தங்களின் கடவுளாக ஏற்றுக் கொண்டால் இந்தியா வில் வாழலாம் என்று ஆர்எஸ்எஸ்சுக்கு தத்துவத்தை வழங்கிய கோல்வாக்கர் எழுதியிருக்கிறார்.

1939இல் ஆர்.எஸ்.எஸ். சாகாக்களில் பாடிய பாடல், இப்படி கூறுகிறது:


"நான் பிறந்த தாய்நாடே
உன்னை வணங்குகிறேன்
என்னை வளர்த்த ஆரிய நாடே
உன்னை வணங்குகிறேன்
எங்களை விரைவில் முழுமையான
இந்துக்கள் ஆக்குங்கள்
எங்களை இராமனின் சீடர்களாக்குங்கள்"

என்கிறது அந்தப் பாடல்.

இராமனின் பிள்ளைகளாக பிறப்பது இருக்கட்டும்; 'இராமனே' எப்படிப் பிறந்தான்?

இராமன் பிறப்புப் பற்றி வால்மீகி இராமாயணம் என்ன கூறுகிறது? அஸ்வமேத யாகத்தில் பிறந்தவன் இராமன் என்று கூறுகிறது. இதன் கதை நாற்றமடிக் கிறது என்பதால், கம்பன், "அஸ்வமேத யாகத்தை" "புத்திர காமேஷ் யாகமாக" திருத்தி எழுதினான். கம்பனாலேயே இராமன் பிறப்பை சகிக்க முடியவில்லை போலும். வால்மீகி இராமாயணம் தான் மூல இராமாயணக் கதை. சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட அந்த மூல இராமாயணம் இராமன் பிறப்புப் பற்றி என்ன கூறுகிறது?

கலைக்கோட்டு மகரிஷியும், இன்னும் அவருக்குத் துணைவராக இருத்துவிக்களும், புரோகிதப் பார்ப்பனர்களும் சேர்ந்து யாகசாலையொன்று ஏற்படுத்தி, வேதாகம விதிப்படி யக்கியங்களை வளர்த்து, யாக மண்டபத்தைச் சுற்றி வேதப் பிராமணர்கள் உட்கார்ந்துகொண்டு, சோமக் கொடி என்னும் ஒருவகைப் பூண்டை நசுக்கி அதன் சாற்றைப் பிழிந்து ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண் டிருப்பர். யாக குண்டத்தைச் சுற்றி இருபத்தோரு யூபஸ்தம்பங்களை நாட்டி, அந்த ஸ்தம்பங்கள் தோறும் பசுக்கள், குதிரைகள், பாம்பு, பறவை, பன்றி, ஆமை முதலியவற்றைக் கொண்டு வந்து முறைப்படி வைக்கப்பட் டிருக்கும். அதன் பிறகு சாஸ்திர விதிப்படி அஸ்வமேத யாகத்தற்கு வேண்டிய நல்ல பஞ்ச கல்யாணிக் குதிரையொன்றும், முன்னூறு "யாகப் பசுவும்" கொண்டுவந்து, அந்த



யூபஸ்தம்பத்தில் கட்டப்பட்டிருந்தனவாம். புரோகிதராகிய இருத்துவிக்களும், வேதப் பிராமணர்களும் முன்னாடியே சித்தப்படுத்தி வைத்திருந்த சோமபானத்தை அருந்தி, பசு, பன்றி, பாம்பு, ஆமை, மச்சம் முதலியவற்றை அந்த யாக குண்டத்திலிட்டு அக்கினிதேவனுக்கு ஆகுதி கொடுத்துவிட்டுத் தங்களும் அவற்றைத் திருப்தியாய் புசித்தானவுடன், அரசனின் முதல் மனைவியாகிய கவுசல்லியா தேவியார் பஞ்சகல்யாணிக் குதிரையை மும்முறை சுற்றி வந்தவுடன், தனது கையிலிருக்கும் உடைவாளால் அஸ்வத்தை மூன்று துண்டாக வெட்டிக் கொன்றபின், அவ்விரவு முழுதும் அஞ்சா நெஞ்சத்துடன் அக்குதிரையைக் கட்டித் தழுவிக் கொண்டிருந்து, விடிந்தபின் அரசன் தன் பத்தினிமார்களாகிய மூவரையும் இருத்துவிக்களுக்குக் (புரோகிதர்களுக்கு) குருதட்சணையாகக் கொடுத்துவிட்டாராம்., இருத்துவிக்குகளும் இராஜபத்தினிமார்களைக் கைப்பற்றிக் கொண்டுபோய் அந்த இரவு முழுதும் தங்களிடத்தில் வைத்திருந்து, அவர் களுக்குச் சந்தான பாக்கியத்தை (குழந்தைப் பிறக்கும் பாக்கியத்தை) அளித்தவுடன், அரச பத்தினிகள் மூவரையும் அரசனிடத்தில் அவர் களுக்கு ஈடான திரவியங்களைப் பெற்றுக் கொண்டு திருப்பிக் கொடுத்து விட்டார்களாம்.

அன்றே கவுசல்லியாவுக்கு இராமனும், கைகேயிக்குப் பரதனும், சுமத்திரைக்கு இலட்சு மணன், சத்துருக்கனும் ஜனனமானார்கள்.

இப்படி நம்ப முடியாத கற்பனையில் உருவாக்கப்பட்ட ஒரு இழிப் பிறப்பை கலாசாரத்தின் அடையாளமாகவும் தேசத்தின் குறியீடாகவும் மாற்றுவதற்குத் துடிக்கிறது, பார்ப்பனியம்!

இந்த "இராமனு"க்குப் பிறந்தவர்களே - நாட்டையும் ஆளவேண்டும் என்கிறார்கள்!

வெட்கம்! மகா வெட்கம்!

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

# கருநாடக அமைச்சரின் மூடநம்பிக்கை எதிர்ப்பு

தமிழ்நாட்டு அமைச்சர்கள் கடவுளுக்கு மொட்டை போடுதல், பால்குடம் எடுத்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், மண்சோறு சாப்பிடுதல் என்று மூடநம்பிக்கையின் முடை நாற்றத்தில் மூழ்கிக் கிடக்கும்போது கருநாடகத்திலிருந்து ஒரு அமைச்சர் மூடநம்பிக்கைக்கு எதிராகப் போராடுகிறார் என்பது மகிழ்ச்சியான செய்தியல்லவா? அம்மாநில முதல்வர் சித்தராமய்யாகூட ஒரு பகுத்தறிவாளர்தான். அவரது அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள கலால்வரித் துறை அமைச்சர் சதீஷ் ஜர்ஹி ஹோலி இன்னும் ஒரு படி மேலே போய் மூடநம்பிக்கைகளுக்கு எதிராக மக்களிடம் இயக்கம் நடத்தி வருகிறார். அம்மாநில அரசு மூடநம்பிக்கைகளுக்கு எதிராக சட்டம் கொண்டு வர திட்டமிட்டது. பாரதிய ஜனதா சட்டத்தைக் கடுமையாக எதிர்த்ததால் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு மக்களிடம் மூடநம்பிக்கை எதிர்ப்புப் பிரச்சாரத்தை செய்து வருகிறார், அமைச்சர் சதீஷ் ஜர்ஹி ஹோலி.

இதற்காக, அம்பேத்கர் நினைவு தினமான டிசம்பர் 6ஆம் தேதி இரவு சுடுகாட்டில் “பேய்” நடமாடுகிறது என்ற மூடநம்பிக்கையை அம்பலப் படுத்தத் திட்டமிட்டார். தனது ஆதரவாளர் களுடன் ‘பெலகாவி’ எனும் சுடுகாட்டுக்குச் சென்றார். சுடு காட்டிலேயே இரவு உணவு சாப்பிட்டு, அங்கேயே இரவு முழுதும் தனது ஆதரவாளர்களுடன் உறங்கினார். இது பற்றி கூறுகையில், “சுடுகாட்டில் பேய்கள் தங்கி நடமாடும் இடம் என்ற கட்டுக்கதையை ஒழிக்க விரும்புகிறேன். உண்மையில் சுடுகாடு ‘புனிதமான’ இடம். ‘இலட்சுமி’யை வணங்காத பில்கேட்ஸ்தான் உலகின் முதல் பணக்காரர். ‘இலட்சுமி’யை வணங்காத, எனக்கு வணிகத்தில் ரூ.600 கோடி வரை பணம் புரள்கிறது. என்னுடைய பதவியே பறி போனாலும் சரி, மூடநம்பிக்கைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுப்பேன்” என்கிறார் சதீஷ்! பகுத்தறிவு உலகம் உங்களை பாராட்டி வரவேற்கிறது, சதீஷ்!

### சுஷ்மாவின் ‘கீதை’ பக்தி

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சராக உள்ள பார்ப்பன அம்மையார் சுஷ்மா சுவராஜ், ‘கீதை’ இந்தியாவின் ‘தேசிய புனித நூலாக’ விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது என்றும், சில நடைமுறைகள் பூர்த்தியான பிறகு அறிவிப்பு வெளியாகும் என்றும் டிசம்பர் 7ஆம் தேதி டெல்லியில் ‘திருவாய் மலர்ந்தருளி’யுள்ளார். ‘கீதா பிரேர்னா மகாத்சோவ்’ என்ற அமைப்பு டெல்லியில் கீதையின் ‘5151’ஆம் ஆண்டுக்கான விழாவை டெல்லி செங்கோட்டையில் நடத்தியுள்ளது. அதில் பேசிய விசுவ இந்து பரிஷத் தலைவரான பார்ப்பனர் தொகாடியா, கீதையை ‘தேசிய புனித நூலாக’ உடனடியாக பிரதமர் அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். தொடர்ந்து பேசிய சுஷ்மா, அதற்கான உறுதியை மேடையிலே அறிவித்துள்ளார்.

“ஒவ்வொரு தனி மனிதரின் பிரச்சினைக்கும் கீதையில் தீர்வு இருக்கிறது. எனவேதான் கீதையை தேசிய நூலாக்க வேண்டும் என்று நாடாளு மன்றத்திலேயே நான் வலியுறுத்தினேன். வெளிநாட்டுத் துறை அமைச்சர் என்கிற முறையில் நான் சந்திக்கும் சவால்களை கீதையின் கருத்துகள் வழியாகவே எதிர்கொண்டு வருகிறேன். 700 சுலோகங்கள் கொண்ட கீதையை நாளொன்றுக்கு இரண்டு வீதம் ஓராண்டுக்குள் படித்து முடித்து விட்டால், வாழ்க்கையில் புதிய பாதை கிடைக்கும்; விரைவில் மோடி இதற்கான அறிவிப்பை வெளியிடுவார்” என்று பேசி இருக்கிறார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி, சுஷ்மாவின் கருத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளார். “நமது அரசியல் சட்டம் - இந்தியாவை மதச் சார்பற்ற நாடு என்று கூறுகிறது. அனைத்து புனித நூல்களையும் நாம் சமமாக மதிக்க வேண்டும்; கீதையை மட்டுமல்ல” என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் தலைவர் மனீஷ் திவாரியும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். காங்கிரஸ் ஆட்சியின் போது இரஷ்யாவில் ‘அரே கிருஷ்ணா-அரே ராமா’ இயக்கத்துக்கு அங்கே ஒருநீதிமன்றம் தடைவிதித்த போது காங்கிரஸ் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த கே.ஆர். கிருஷ்ணா, உடனே எதிர்ப்பு தெரிவித்து, டெல்லியிலுள்ள இரஷ்ய தூதரக அதிகாரியையும் அழைத்துக் கண்டித்தார். இதில் காங்கிரசும், பா.ஜ.க.வும் ஒத்த கருத்துடையவை தான். அம்பேத்கர், ‘கீதையை முட்டாள்களின் உளறல்’ என்றார். விவேகானந்தரும் கீதையை கேள்விக்கு உட்படுத்தியவர்தான். ‘குருக்ஷேத்திரப் போராட்டக் களத்தில் கிருஷ்ணன், இப்படி ‘உபதேசம்’ செய்து கொண்டிருந்தார் என்பதை நம்ப முடியாது’ என்றார் அவர். சமஸ்கிருத திணிப்பு முயற்சியைத் தொடர்ந்து வர்ண பேதத்தையும் பெண்கள் ‘பாவயோனி’யில் பிறந்தவர்கள் என்று பெண்களையும் அவமதிக்கும் கீதையை தேசிய நூலாக்கப் போகிறார்களாம்!

### திடுக்கிடும் திருப்பங்கள் நிறைந்த கூடங்குளம் கதை

கூடங்குளம் அணுமின் நிலைய உற்பத்தி, திடுக்கிடும் திருப்பங்கள் நிறைந்த ‘மர்மக் கதை’ களாகக் கூடங்குளம் அணுமின் நிர்வாகத்தால் எழுதப்பட்டு வருகிறது. கூடங்குளம் மின் உற்பத்தி யின் முடிவு என்ன? அது எப்போது வணிக விற்பனைக்கு தயாராகப் போகிறது? கடைசியாக தமிழ்நாட்டு மக்களுக்கு மின்சாரம் கிடைக்குமா? கிடைக்காதா என்ற முடிவை கதையைப் படிப்ப வர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். 81 நாள்களாக மூடப்பட்டிருந்த கூடங்குளம் அணுமின் உற்பத்தியின் முதலாவது பிரிவு, கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 10 மணிக்கு மீண்டும் மின் உற்பத்தியைத் தொடங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் 7ஆம் தேதி இந்தப் பிரிவு 1000 மெகாவாட் உற்பத்தியை எட்டிவிட்டதாக அறிவித்தார்கள். அடுத்த திருப்பமாக ஜூலை 16ஆம் தேதி திடீரென நிறுத்தப் பட்டது. வணிக ரீதியாக மின் இணைப்பை உருவாக்குவதற்காக இந்த நிறுத்தம் என்று காரணம் கூறப்பட்டது. மீண்டும் ஆகஸ்டு 31 ஆம் தேதி ஒரு திருப்பம்; அன்றுதான் அணுசக்தி ஒழுங்கு முறை வாரியம் வணிகத்துக்காக உற்பத்தியைத் தொடங்கலாம் என்ற அனுமதியை வழங்கியது.

வணிக இணைப்புக்கான சோதனை முயற்சி களுக்காக ஜூலை 16இல் நிறுத்தப்பட்டு, ஆகஸ்டு 31இல் ஒழுங்குமுறை வாரியம் பச்சைக்கொடி காட்டியதால், “மீண்டும் தொடங்கிய வணிக உற்பத்தி” செப்டம்பர் 13இல் மீண்டும் நிறுத்தப் பட்டது. “சில தொழில் நுட்ப குறைபாடுகள்” என்று காரணம் கூறினார்கள். எரி பொருளான அணுவை சுழற்றி மின்சாரத்தைத் தயாரிக்கும் ‘டர்பைன்’ பழுதடைந்து விட்டது என்றார்கள். இரஷ்யாவிலிருந்து பழுது பார்க்க நிபுணர்கள் வரப் போகிறார்கள் என்று கூறப்பட்டது. பிறகு உள்நாட்டிலேயே பழுது பார்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார்கள். அதுவும் முடியாத நிலையில் ஏற்கனவே இரண்டாவது அணுமின் உற்பத்திப் பிரிவில் உள்ள புதிய ‘டர்பைன்’ எந்திரத்தை கழற்றி, முதல் பிரிவில் பொருத்தியிருக்கிறார்கள். இதற்குப் பிறகு கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 9.59க்கு முதல் பிரிவில் மின் உற்பத்தி வெற்றிகரமாக தொடங்கிவிட்டது என்று நிர்வாகம் தெரிவித்துள்ளது. கடந்த ஜூன் 7ஆம் தேதி 1000 மெகாவாட் உற்பத்தியை எட்டிவிட்டதாக அறிவிக்கப்பட்ட இந்த முதலாவது பிரிவு, இப்போது 69 மெகாவாட் உற்பத்தியை மட்டும் செய்து வருவதாக நிர்வாகம் அறிவித்திருக்கிறது.

மின் சக்தியை வணிக ரீதியாக விற்பனை செய்வதற்கு தொடர்ந்து ஓராண்டு காலம் மின் உற்பத்தி நடக்க வேண்டும். அப்போதுதான் வணிக நிறுவனங்கள் நம்பிக்கையோடு வாங்குவதற்கு முன்வரும் என்று கூறப்படும் நிலையில் ஒவ்வொரு மாதமும் திடுக்கிடும் திகில் திருப்பங்களோடு கூடங்குளம் அணுமின் நிர்வாகம் மக்களின் காதில் பூ சுற்றிக் கொண்டிருக்கிறது. அணுசக்தித் துறை ‘அவாளுக்கு’ மட்டுமே உரிமையுடையது. எனவே ‘பூதேவர்களை’ எதிர்த்து கேட்க முடியாது. கேள்வி கேட்டால் நாக்கை வெட்ட வேண்டும் என்று ‘மனுதர்மம்’ கூறுவதை எடுத்துக் காட்டுவார்கள்! நமக்கேன் வம்பு?

### இடஒதுக்கீடு: சமூக ஆய்வாளர் தரும் பதிலடி

இடஒதுக்கீட்டுக்கு எதிராக முன்வைக்கப்படும் வாதங்களுக்கு சரியாக சாட்டையடி கொடுத்திருக் கிறார், ஒரு சமூக ஆய்வாளர். இவர் ஒரு பார்ப்பனப் பெண் என்பதுதான் இதில் மிகவும் குறிப்பிடத்தக்கது. பெயர் வார்கா அய்யர். மும்பையில் செயல்படும் டாட்டா சமூக ஆய்வு நிறுவனத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் இவர், கடந்த சனிக்கிழமை (டிசம்பர் 6) கோவாவில் ‘சர்வதேச கலை இலக்கிய மய்யம்’ ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில், ‘அம்பேத்கரும் இடஒதுக்கீடும்’ என்ற தலைப்பில் பேசியுள்ளார்.

“நீண்டகாலமாக புறக்கணிப்புக்கு உள்ளான சமூகங்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இட ஒதுக்கீடுகள், அவர்கள் முன்னேற்றத்தை உறுதி செய்யும் சக்தி வாய்ந்த பாதுகாப்பு நடவடிக்கை. வரலாற்று அநீதிகளை சரிசெய்வதற்கான திட்டம், சமூகத்தின் ஒரு சில குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே மிக அதிக ஊதியம் பெறும் பதவிகளில் குவிந்து வருகிறார்கள். மற்ற பெரும்பகுதி பிரிவினர். உயர் பதவிகளில் இப்போதுதான் உள்ளே நுழைய கதவு திறந்திருக் கிறது. இந்த நிலையில், இடஒதுக்கீடு மட்டுமே இவர்களுக்கான பாதுகாப்பு” என்றார் வார்கா.

“அனைவருக்கும் நீதி; ஆனால் ஒருவருக்கும் திருப்தி இல்லை” - என்று இடஒதுக்கீட்டுக்கு எதிராக முன் வைக்கப்படும் முழக்கத்தை ஏற்க முடியாது, அது ஆபத்தானது என்று எச்சரித்தார். சமூக அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தவும், பாகுபாடு காட்டி விலக்கி வைக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும் உருவாக்கப்பட்ட இடஒதுக்கீட்டுக் கொள்கையை “தகுதி - திறமைக்கு” எதிரானதாக நிலைநிறுத்தும் முயற்சிகள் கண்டனத்துக்கும் வருத்தத்துக்கும் உரியது” என்று கூறிய அவர், “ஜாதி அமைப்பைப் பிரிட்டிஷ்காரர்கள்தான் உறுதிப் படுத்தினார்கள் என்ற வாதத்தையும் ஏற்க முடியாது” என்றார். “ஜாதியப் பிளவுகள் - ஜாதியப் பாகு பாடுகள் - அது சமூகத்தில் ஏற்படுத்திய பாதிப்பு களை மிக விரிவாக ஆவணப்படுத்தியவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள். உண்மையில் அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்” என்றார்.


“தொழில்நுட்பம் பயின்ற உயர் வர்க்கம் இடஒதுக்கீட்டை எதிர்ப்பது பற்றி அவரிடம் பார்வையாளர்கள் கேட்டதற்கு தனியார் துறை குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறை இப்போதும் ஜாதியப் பாகுபாடுகளைப் பின்பற்றியே வருகிறது என்பது வெளிப்படையான உண்மை. தலித் இலக்கியவாதிகளின் செயல்பாடுகள் வளர்ந்து வரும் நிலையில் ஊடகங்கள் அதற்கு போதுமான முக்கியத்துவம் தராமல் புறக்கணிக் கின்றன. எனவே, தலித் இலக்கிய வாதிகள் சமூக வலை தளங்களைப் பயன்படுத்துகிறார்கள். நாட்டின் முன்னணி ஊடகங்கள் தொடர்ந்து தலித் பிரச் சினைகளைப் புறக்கணித்து வருகின்றன. இந்த ஊடகங்களில் தலித் பிரதிநிதித்துவம் மிகமிகக் குறைவாகவே இருக்கிறது” என்றார் திருமதி வார்கா அய்யர் - சமூக ஆய்வாளர் என்ற முறையில் விருப்பு வெறுப்பின்றி சமூக நீதிக்கான குரலை ஒலித்திருக் கிறார். (செய்தி: 6.12.2014, ‘இந்து’ ஆங்கில ஏடு)

தொகுப்பு: இரா

# பெரியாரின் இராமாயண நூல் தடையை நீக்கியவர்

*(தந்தை பெரியார் அவர்கள் எழுதிய 'இராமாயணா-எ ட்ரூ ரீடிங்' (RAMAYANA - A TRUE READING) ('இராமாயணப் பாத்திரங்கள்' என்ற நூலின் மொழி பெயர்ப்பு) என்ற ஆங்கில நூலையும் அதன் இந்தி மொழி பெயர்ப்பையும் உத்தரப்பிரதேச மாநில அரசு தடை செய்தது. இதை எதிர்த்து உத்தரப்பிரதேச மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு – தடை செல்லாது என்று அது தீர்ப்பு அளித்தது. தீர்ப்பை எதிர்த்து உ.பி. அரசு உச்சநீதி மன்றத்தில் அப்பீல் செய்தது. உச்சநீதிமன்றமும் உ.பி. அரசு இந்த நூலுக்கு தடை விதித்தது செல்லாது என்று தீர்ப்புக் கூறி அப்பீலை தள்ளுபடி செய்தது.*

*நீதிபதி கிருஷ்ண அய்யர் அவர்கள் அளித்த அந்த தீர்ப்பின் விவரம் அவரது நினைவாக இங்கே தரப்படுகிறது. செப்டம்பர் மாதம் தந்தை பெரியார் பிறந்த நாளன்று (17.9.1976) இந்தத் தீர்ப்பு வந்தது. அவசர நிலைகாலம் அது; விடுதலை தணிக்கைக்கு உள்ளாகி வந்தது; பார்ப்பன அதிகாரிகள் 'விடுதலை'யில் இதை வெளியிட அனுமதிக்கவில்லை. தீர்ப்பின் மய்யக் கருத்து:*



அரசு தரப்பில் வாதிட்ட வழக்குரைஞர், தெய்வீகத் தன்மை வாய்ந்த இராமன், சீதை, ஜனகன் முதலியவர்களை இழிவுபடுத்தும் விதத்திலும் உத்தரப்பிரதேசத்தில் வாழும் இந்துக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தும் வகையிலும் இருப்பதால், கோர்ட்டார் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

நாங்கள் அவருடைய வாதத்தை ஆராயுங்கால் அடிப்படை உரிமைகள் விலங்கிடப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதனையும், அந்த அடிப்படை உணர்வுகளால் உந்தப்பட்டு உத்தரப்பிரதேச அரசால் நூல் பறிமுதல் செய்யப்படுவதற்கு ஆணையிடப் பட்டுள்ளது என்பதனையும் தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது.

நமது இந்திய நாடானது மதச்சார்பற்ற நாடு. எந்த ஒரு மதத்தினையும் தழுவியது அல்ல. இந்த நாடானது எந்த ஒரு குறிப்பிட்ட மக்களின் நம்பிக்கையைப் பற்றிக் கவலைப்படுவதல்ல. ஆனால், மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், சட்டம், ஒழுங்கு இவற்றை நிலைநாட்டுவதிலும் நாட்டங்கொண்டு அக்கறை கொண்டுள்ளது. அதே நேரத்தில் எந்த ஒரு வகுப்பு மக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தும் படியான - தூண்டும்படியான வெளியீடுகள் அல்லது பேசப்படுகின்ற சொற்களைப்பற்றிக் கவலை கொண்டு, மூர்க்கத்தனமான செயல்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமைக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறது. எந்த ஒரு அரசும் அமைதியையும், பாதுகாப்பையும் கட்டிக் காப்பது அவசியம். அப்படி அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் எந்த ஒரு வடிவிலோ பங்கம் ஏற்பட்டு ஆபத்து விளையுமேயானால், அந்த அரசு நீதித் துறையை நாட வேண்டியுள்ளது.

எங்கள் முன்னால் உள்ள இந்த மேல்முறையீட்டு வழக்கை, சட்ட ரீதியாகவும் பார்க்கின்ற நேரத்தில் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு தவறானது அல்ல. பல்வேறு உயர்நீதிமன்றங்கள் இது சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பல்வேறு விதங்களில் முடிவு செய்து தீர்ப்பளித்துள்ளன. தனிப்பட்ட ஒரு மனிதன்மீது கடுமையான நடவடிக்கையோ அல்லது தடை சட்டத்தின்மூலமோ கொண்டுவரப்படுமேயானால், அதனால் ஏற்படும் குற்ற விளைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எனவே, குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 99-ஏ-வை ஏற்படுத்திய அறிஞர்கள், அரசிற்கு முன்னேற்பாடான அதிகாரங்களை வழங்கியுள்ளார்கள். சட்ட ரீதியாகச் சொல்லப்பட்ட வழிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் அதை பயன்படுத்த வேண்டும். இந்தியக் குடிமக்களின் இரு சாராரிடையே பகைமையை வளர்க்கும். அல்லது ஒரு மதத்தினரின் உணர்ச்சியைப் புண்படுத்தும் வெளியீடுகள் இருக்குமேயானால், சட்ட ரீதியாக அரசு இதனை உன்னிப்பாகக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்திற்கு உட்பட்டு செயல்படவே இந்தப் பிரிவு நிர்ப்பந்திக்கிறது. 99-ஏ பிரிவு எந்தக் காரணத்திற்காகப் பறிமுதல் செய்யப்படுகிறது என்பதனையும் விளக்க வேண்டுமென உரைக்கிறது. எந்தக் காரணத்திற்காக அரசு செயல்பட்டிருக்கிறது என்பதனை கண்டிப்பாக விளக்கப்பட வேண்டுமென சட்டம் நிர்ப்பந்திப்பதால், காரணத்தை விளக்காமல், அரசு அறிவிப்பாணையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொல்வது கூடாது.

சட்ட ரீதியாக ஒரு பிரச்சினை கட்டாயமாக்கப் படுமேயானால், நிர்ப்பந்திக்கப்படுமேயானால், அதன் படி அரசு செயல்பட்டே தீர வேண்டும். சட்ட ரீதியாக ஒரு வெளியீட்டை ஒரு மாநில அரசு பறிமுதல் செய்ய உத்தரவை பிறப்பிக்குமேயானால், அது ஒரு சாதாரண பிரச்சினை அல்ல. மிகவும் கவனமாகச் செயல்பட வேண்டுமென்பதனை மாநில அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

சட்ட நடைமுறை ஏதாவது ஒன்று விடுபடுமேயானால், சட்டம் அங்கு செயலிழந்து விடுகிறது.

மன்னர் ஆட்சியிலிருந்து மக்களாட்சிக்கு நாம் திரும்பி வருகின்றபோது, மக்களின் உரிமைகளை உன்னிப்பாகக் கவனிப்பதோடு, பாதுகாக்கப்படுவதும் முறையானதாகும். சட்ட ரீதியாக இப்படித்தான் செயல்படவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப் படும்போது, அப்படிச் செய்யாமல் செயல்பட்டு விட்டு விளக்கங்கள் கூறுவது தகுதியானதும் முறையானதும் அல்ல. குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 99-சி-படி பாதிக்கப்பட்டவர்கள் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்து தடை உத்தரவைத் தகர்க்க மனு கொடுக்கும் நேரத்தில், அரசு எந்தக் காரணத்திற்காக நூல்களை பறிமுதல் செய்தது?

நீதிமன்றம் அரசு அறிவிப்பாணையில் உள்ள கருத்துகளை எல்லாம் கவனித்து, தனது எல்லைக்கு அப்பாற்பட்டு விளக்கமான விசாரணை செய்ய இயலாது. சட்ட ரீதியாகச் சில சலுகைகள் தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுப்பதற்குச் சட்டம் குறிப்பிட்ட அளவு இடமளிக்குமேயானால் அதனைத் தடை செய்ய, வெளியீட்டை தடை செய்ய அதிகாரம் யாருக்குமில்லை.

நாங்கள், தடை செய்யப்படும் நூலின் கருத்தை விரிவாக எடுத்துரைத்துப் பேச வரவில்லை. அரசு செயலையே விமர்சிக்கிறோம்.

தனி மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள உரிமை பறிக்கப்படுவதற்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 99-ஏ-யைப் பயன்படுத்துவது சரியானது அல்ல. தேச நலனைப் பாதுகாப்பதற்குத் தனி மனித உரிமையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதில் அய்யமில்லை.

அதே நேரத்தில், தனி மனித சுதந்திரம் பற்றி அரசியல் சட்டம் தந்துள்ள விளக்கத்தில் அதற்கான கட்டுப்பாடுகள் உரிய காரணங்களோடு கூறப்பட்டுள்ளன.

குற்றமுறை பிரிவு 99-ஏ-வை உருவாக்கியபோது அரசியலமைப்பை கருத்தில் கொண்டுதான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

கண்மூடித்தனமான, மூடத்தனமான கொள்கைகள் கண்டிக்கப்படும்போதும் வெளியிடும் போதும் எந்த ஒரு முற்போக்கான மாநில அரசும் அதை தடை செய்யக் கூடாது என்பதே குற்றமுறை 99-ஏ பிரிவில் வலியுறுத்தப்பட்டிருக்கும் செய்தியாகும்.

**தடை செய்வதானால் காரண காரியத்தோடு விளக்கம் வேண்டும்**

நம்முடைய அரசியல் அமைப்பு இந்த மாதிரியான பாராட்டத்தக்க கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள காரணத்தினால் நாங்கள் கடமை தவறாமல் சட்டரீதியாக பரிசீலிக்க வேண்டும்.

சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும்போதுதான் எந்த வெளியீட்டையும் தடை செய்து அதன் மூலம் பொது மக்களின் அமைதியைக் காக்க அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

அரசின் அறிவிப்பாணை இம் முறையில் இருந்து தவறியிருக்கிறது.

மூடத்தனத்தில் ஊறிப் போன சிலருக்கு வளர்ந்துவரும் முற்போக்கான சில கொள்கைகள் நகைப்பிற்குள்ளாக்குவதாக இருக்கலாம்.

அம்மாதிரியான சிலருக்கு சுவாமி விவேகானந்தரின் - "எங்களுடைய மதம் அடுப்பங்கரையிலும், எங்களுடைய தெய்வம் அடுப்பங்கரை பானைகளாகவும் இருப்பதால் எந்த மதமும் என்னைத் தொடுவதற்கு அருகதையற்றதாக இருக்கிறது" என்று சொல்வதும், "மதங்களை நம்பாவிட்டாலும் நான் புனிதத் தன்மையுடையவனாக இருக்கிறேன்" என்று பண்டித ஜவகர்லால் நேரு தன்னுடைய (Discovery of India) என்ற புத்தகத்தில் மேற்கோளாகக் காட்டப்பட்ட செய்திகளும்கூட புண்படுத்துவதாக இருக்கிறது என்று சொல்லலாம்.

**முறைகேடான வழிகளில் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது**

தற்போது, மாநில அரசு தடை விதிக்கவேண்டிய காரண காரியங்களை குற்றமுறை பிரிவு 99-ஏ படி கூறியிருக்க வேண்டும்.

இந்தப் பிரிவை ஒவ்வொரு மாநில அரசும் பல சந்தர்ப்பங்களில் பயன்படுத்தி வருகின்றன. எனவே, அதனைப்பற்றி தெளிவான விளக்கத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவானது, பல்வேறு சமுதாயத்தையும், பலதரப்பட்ட மதத் தன்மையையும், பகுத்தறிவுவாதிகளையும், கண்மூடித் தனமான மூடநம்பிக்கைக் கொண்டவர்களையும் கொண்டுள்ள நாடு. எந்த ஒரு மாநில அரசும் இதனைக் கருத்தில்கொண்டு எந்த ஒரு வெளியீட்டையும் தடை செய்யும்போது முறைகேடான வழிகளில் அதிகாரத்தைப் பயன்படுத்தாது என நம்புகிறோம்.

இந்த ஒரு நடைமுறை தடையானது நெருக்கடி பிரகடனத்திற்கு முற்பட்டதாக இருப்பதால், இந்த அரசின் மேல் முறையீட்டை தள்ளுபடி செய்கிறோம் என்று நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் தீர்ப்பில் கூறினார்.

**நன்றி : திராவிடர் கழகம் வெளியிட்டுள்ள "இராமாயண போராட்ட வரலாறு" நூலிலிருந்து**

## கவலை அழியாதது ஏன்?

*நல் வாழ்வு வாழ்வதென்பதற்கும் சுக வாழ்க்கை அடைவதென்பதற்கும் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்பதற்கும் ஆசைப்படுவதில் மனிதனுக்குக் குறிப்பிட்ட எல்லையே கிடையாது. நேற்று அடைந்ததைவிட இன்று ஒரு படி அதிகச் சுகம் கண்டால் இன்னமும் இதைவிட அதிகச் சுகம் காண வேண்டுமென்று முயற்சிப்பான்.*

*இப்படியே படிப்படியாக நாளுக்கு நாள் தங்கள் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற எண்ணத்திலேயே கவலை கொள்கிறார்கள். இதற்கு முடிவே கிடையாது. தான் சாகும் வரை இந்த ஆசை இருக்கத்தான் செய்யும். அதனால் கவலை அழியாது.*

**– பெரியார், 'விடுதலை' 25.9.1955**

DATE OF PUBLICATION 10.12.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# சுவிஸ் நாட்டில் கழகத் தலைவர் பங்கேற்ற "மாவீரர் நாள்"





# கொளத்தூரில் 'மாவீரர் நாள்'



விடுதலைப் புலிகள் பயிற்சிக் களமான 'புலியூரில்', ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வந்த 'மாவீரர் நாளுக்கு' காவல்துறை இந்த ஆண்டு நிகழ்ச்சி நடைபெறும் சில மணி நேரங்களுக்கு முன் அனுமதி மறுப்பதாக அறிவித்தது. உடனே கொளத்தூரில் உள்ள கே.டி.ஆர்.வி. திருமண அரங்கில் தோழர்கள் மாவீரர் நாளுக்கு ஏற்பாடு செய்தனர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தீபம் ஏற்றி வீரவணக்கம் செலுத்தினார்.

நிகழ்வுக்கு சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார் தலைமையேற்க, கிழக்கு மாவட்ட தலைவர் க. சக்திவேல் முன்னிலை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் பாலன், சூரிய குமார், ஈரோடு இரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, பேரறிவாளன் தாயார் அற்புதம் அம்மாள் உரையைத் தொடர்ந்து, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், 'ஈழ விடுதலையின் தற்போதைய அரசியல் பயணம்' குறித்து விரிவாக உரையாற்றினார்.

தமிழக முழுதுமிருந்து தோழர்கள் குடும்பம் குடும்பமாய் திரண்டு வந்து வீரவணக்கம் செலுத்திய காட்சி உணர்ச்சி மயமாய் இருந்தது.

– **செய்தியாளர்**

## வினாக்கள்... விடைகள்...!

+ நடிகர்களை நம்பி பா.ஜ.க. கட்சி நடத்த வேண்டிய அவசியம் இல்லை.
– ***தமிழிசை சவுந்தரராஜன்***

அப்படியா? ரஜினி, பா.ஜ.க.வுக்கு வர மாட்டேன்னு தனது முடிவை உறுதியா தெரிவிச்சுட்டாரா?

+ அரசியல் காழ்ப்புணர்ச்சியால் என்னை "பினாமி முதல்வர்" என்று கூறுகிறார்கள்.
– **ஓ. பன்னீர்செல்வம்**

நியாயமான பேச்சு! 'முதல்வர்' என்று கூறுவதையே ஏற்க மறுக்கும் 'முதல்வரை' பினாமி முதல்வர் என்று எப்படிங்க சொல்லலாம்?

+ இந்தியாவில் சிறைச் சாலைகள் அனைத்தும் கல்விச் சாலைகளாக மாறவேண்டும்.
– ***கிரண்பேடி***

அது முடியாது என்பதால்தான் கல்விச் சாலைகளையாவது சிறைச் சாலைகளாக மாத்துவோமேன்னு தீவிரமா, முயற்சி செஞ்சுகிட்டிருக்கோங்க!

+ வாக்காளர்களுக்கு எந்த காலத்திலும் பணம் கொடுக்க மாட்டோம் என்று தமிழகத்திலுள்ள கட்சிகள் வாக்குறுதி அளிக்க வேண்டும்.
– ***மருத்துவர் இராமதாசு***

வாக்குறுதிதானே! ஓ, தாராளமாக தரலாமே!

+ புதுவை முதல்வர் டெல்லி மாநாட்டில் பங்கேற்கவில்லை. அன்றைய தினம் அழுக்கு சாமியார் குரு பூஜையில் கலந்து கொண்டார்.
–***செய்தி***

மோடியை சந்திச்சு என்ன கிடைச்சுடப் போவுது? சாமியாரிடம் ஆசியாவது கிடைக்கும்னு முடிவு செஞ்சுட்டார் போல.

+ பழனி கோயிலுக்கு பக்தர் வாங்கிய 1000 கோடி சொத்து, கணக்கில் வரவில்லை.
– ***செய்தி***

எதுக்கும், சுவிஸ் வங்கியில் முருகப் பெருமான் பெயரில் கணக்கு இருக்குதான்னு விசாரிச்சுப் பாருங்க.

+ சர்ச்சைக்குரிய 'இராமன் பிள்ளைகள்' பேச்சினைப் பேசிய பெண் அமைச்சர், கிராமத்துப் பெண் என்பதைப் பார்க்க வேண்டும்.
– **மோடி**

அதனால்தான் பா.ஜ.க. பேச விரும்பி, பேசத் தயங்கி மறைப்பதை வெளிப்படையாக போட்டு உடைச்சுட்டார் போலிருக்கு.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 11th December 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | டிசம்பர் 18, 2014 | புரட்சி 13 | முழக்கம் 49 | விலை: ரூ.3.00

# ‘முழக்கம்’ உமாபதியை தாக்கிய காவலர்களை கொலை முயற்சி வழக்கில் கைது செய்!



# தலைநகரில் உணர்ச்சிப் போராட்டம்!



நவம்பர் 26 அன்று மேதகு பிரபாகரன் பிறந்த நாளுக்காக வாழ்த்துப் பதாகை நிறுவியதற்காக கொலை வெறித் தாக்குதலுக்கு உள்ளான திராவிடர் விடுதலைக் கழக செயல் வீரரும் கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டின் செய்தி யாளருமான முழக்கம் உமாபதி மீது தாக்குதல் நடத்திய அபிராமபுரம் காவல்துறையைச் சேர்ந்த இளையராஜா, கலைச்செல்வி, வடிவேலு மீது

(4 ஆம் பக்கம்)

தலையங்கம்

# அதிகார உச்சத்தில் பார்ப்பனர்கள்!

பார்ப்பனர்கள் சமுக-அரசியல்-பொருளாதாரத் துறைகளில் தொடர்ந்து ஆதிக்க சக்திகளாகவே நிலைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனாலும் பார்ப்பனர்கள் ஏதோ விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டதுபோல எழுதவும் பேசவும் தொடங்கியிருக்கிறார்கள். ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டில் சேஷாத்திரி என்ற ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர், பார்ப்பனர்கள் புறக்கணிக்கப்படுவதாக எழுதியிருக்கிறார்.

சமுதாயத்தை இப்போதும் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி தங்களின் மேலாண்மையைத் திணித்துக் கொண்டிருப்பது பார்ப்பனர்கள்தான். சிற்பி உருவாக்கிய ‘கடவுள் சிலைக்கு’, சக்தியூட்டக் கூடியது தங்களின் மந்திரம் தான் என்கிறார்கள். கட்டி முடிக்கப்பட்ட கோயிலானாலும், புனரமைக்கப்பட்ட கோயிலானாலும் அதன் தீட்டுகளை கழித்து தூய்மைப்படுத்தும் ‘கும்பாபிஷேக’ உரிமை, தங்களுக்கு மட்டுமே உண்டு என்பதை நிலைப்படுத்திக் கொண்டுள்ளார்கள். கோயிலுக்குள் கர்ப்பக்கிரகம் வரை நுழைந்து கடவுளை நெருங்கவும், அந்தக் கடவுளிடம் தங்களது சமஸ்கிருத மொழியிலேயே உரையாடவும் தாங்களே உரிமைக்குரியவர்கள் என்று மார்தட்டுகிறார்கள்.

திருமணமானாலும், வீடு திறப்பு என்றாலும் 60ஆம் திருமணமானாலும் இறந்தவர்களுக்கு ‘திதி’ என்றாலும் அதற்கு வேத மந்திரங்களை ஓதி கடவுள்களை ஏற்கச் செய்யும் ‘காப்பீட்டு உரிமைகள்’ தங்களுக்கே உண்டு என்கிறார்கள். இவை மட்டுமா?

இப்போது கருநாடக மாநிலத்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்த மாநிலத்திலுள்ள பல கோயில்கள் ‘மடே ஸ்நானம்’ என்ற பெயரில் ‘உருளும் சேவை’ என்ற சடங்கு நடக்கிறது. பார்ப்பனர்கள் சாப்பிட்டு வீசிய எச்சில் இலையில் படுத்து உருண்டால் ‘பாவங்கள்’, ‘பிரச்சினைகள்’ ‘நோய்கள்’ தீர்ந்து விடும் என்று, “சூத்திரர்”களை நம்ப வைத்து பார்ப்பனர்கள் அதை செயல்படுத்தி வருகிறார்கள். இந்தக் காட்டுமிராண்டி சடங்குக்கு கருநாடக அரசு தடை விதித்தது. உடனே பார்ப்பனர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

“எங்களுடைய எச்சில் இலையின் புனிதத்தை தடை செய்வதா?” என்று கொதித்தெழுந்து, கருநாடக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். 500 ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இந்த ‘புண்ணிய சடங்குக்கு’ தடைபோடும் உரிமை கிடையாது என்று தீர்ப்பு வழங்கி, “தாராளமாக பார்ப்பான் வீசிய எச்சில் இலையில் விழுந்து புரளும் உரிமை பக்தர்களுக்கு உண்டு” என்று நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. இதை எதிர்த்து தலித் மற்றும் பழங்குடி கூட்டமைப்பினர் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தனர். பார்ப்பனர்கள் தங்களின் எச்சில் இலை மீது உருளுவதால் பக்தர்கள் ‘வேண்டுதல்’ நிறைவேறுவதாகவும் நோய்கள் குணமடைந்து வருவதாகவும், எனவே இதைத் தடை செய்யக் கூடாது என்றும் வழக்கறிஞர் வழியாக பார்ப்பனர்கள் வாதிட்டுப் பார்த்தனர்.

வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் மதன் பி. லோகூர் மற்றும் பானுமதி (இவர் தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்), “பழமையான சடங்கு என்பதால் கண்மூடித்தனமாக ஏற்க முடியாது. தீண்டாமைகூட பழங்கால வழக்கம்தான்; அதற்காக ஏற்க முடியுமா?” என்று கேட்டு, “எச்சில் இலை உருளுதலுக்கு” தடை விதித்துள்ளனர். செவ்வாய் கிரகத்துக்கு செயற்கைக் கோள் அனுப்பும் காலத்திலும் பார்ப்பனர்கள் தங்களின் எச்சில் இலையில்கூட ‘புனிதம்’ அடங்கியிருக்கிறது என்று உச்சநீதிமன்றம் வரை சென்று இறுமாப்புடன் வாதாடுகிறார்கள்.

கர்ப்பகிரகங்களை தனி உரிமைகளாக்கிக் கொண்ட இந்தப் பார்ப்பனர்கள், கோயிலுக்குள் நுழைவதற்குகூட தங்களுக்கு மட்டும் தனியாக வழி அமைத்துக் கொண்டுள்ள அவலம் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலுக்குள் நிகழ்ந்து வருகிறது. (அர்ச்சகர் – சங்கர் ராமன் வெட்டிக் கொலை செய்யப்பட்ட கோயிலும் இதுதான்) இந்தக் கோயிலுக்குள் ‘மணவாள மாமுனி’ சன்னிதிக்குள் நுழைவதற்கு பார்ப்பனர்களுக்கு மட்டும் தனி வழி! பார்ப்பனரல்லாதவர்கள், அவர்கள் அர்ச்சகராக இருந்தாலும் ‘வேறு வழி’யைத் தான் பயன்படுத்த வேண்டும் என்ற ‘தீண்டாமை’யை திணித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் ‘பாகுபாட்டை’ எதிர்த்து 2008இல் மாதவ இராமானுஜதாசர் என்ற பார்ப்பனரல்லாத அர்ச்சகர் வழக்கு தொடர்ந்தபோது, நீதிமன்றம் இந்த “தீண்டாமை பாகுபாட்டுக்கு” எதிராக தீர்ப்பளித்தது. ஆனால், தீர்ப்பை பார்ப்பனர்கள் மதிக்கத் தயாராக இல்லை. அறநிலையத் துறையும் கண்டுகொள்ளவில்லை. மீண்டும் கடந்த செப்டம்பர் மாதம், அறநிலையத் துறையின் கவனத்துக்கு கொண்டு சென்றபோது, உறக்கத்திலிருந்து விழித்த அறநிலையத்துறை, ‘தனி வழிப் பாகுபாட்டைப்’ பின்பற்றக் கூடாது என்று கோயில் பார்ப்பனர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறதாம். ஆனாலும், பார்ப்பனத் தீண்டாமை முடிவுக்கு வரவில்லை என்றே செய்திகள் வருகின்றன.

அமெரிக்காவைச் சார்ந்த மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தின் சமுகப் பொருளாதார ஆய்வு மய்யம், இந்திய மனிதவள மேம்பாட்டு மய்யத்துடன் இணைந்து – இந்தியாவில் கடந்த 60 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள சமுக மாற்றங்கள் குறித்து அண்மையில் ஆய்வு ஒன்றை நடத்தியது. இந்தியாவில் தீண்டாமையை மிக அதிகமாக கடைபிடிப்பவர்கள் (54 சதவீதம்) பார்ப்பனர்கள்தான் என்று கூறும் இந்த ஆய்வு “பார்ப்பனர் வீட்டில் பிறக்கும் ஒருவனுக்கு, அவனை வளர்க்கும் முறையிலேயே தீண்டாமை உடன் பிறந்ததாக மனதளவில் ஊட்டப்படுகிறது. இதனால் பொது வெளியிலும் இவர்கள் தீண்டாமையை பின்பற்றுகிறார்கள்” என்று கூறுகிறது. இந்த ஆய்வு இந்தியாவில் நான்கில் ஒருவர் ‘தீண்டாமை’யை கடைப்பிடிப்பதாக கூறுகிறது.

இப்படி, சமுதாயத் துறையில் மட்டுமல்ல; அதிகாரத் துறையும் பார்ப்பனர்களின் ‘இரும்புக் கரங்களுக்குள்’ தான் சிக்கிக் கிடக்கின்றன. இதோ, ஒரு உதாரணம்: “இந்தியாவில் உள்ள தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களில் 9052 இயக்குனர் பதவிகள் உள்ளன. இதில் பார்ப்பனர், உயர் ஜாதியினர் மட்டும் 8387 (92.6 சதவீதம்), பிற்படுத்தப்பட்டோர் 346 பேர் மட்டுமே (3.8 சதவீதம்), தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் 319 மட்டும் தான் (3.5 சதவீதம்).

**(தகவல் : ‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’ 11.8.2012)**

மோடியின் காபினட் அமைச்சர்களில் 30 சதவீதம் பேர் பார்ப்பனர்கள் என்பதை இதே பகுதியில் ஏற்கனவே எழுதியிருக்கிறோம். நிதித் துறை, இராணுவத் துறை, வெளிநாட்டுத் துறை, தொடர்வண்டித் துறை, தொழில் துறை, மருத்துவத் துறை, உரம் மற்றும் இரசாயனத் துறை, நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை என முக்கியத் துறைகள் அனைத்துக்குமே பார்ப்பனர்கள்தான் அமைச்சர்கள். மோடியின் பாதுகாப்பு ஆலோசகர், பொருளாதார ஆலோசகர், ரிசர்வ் வங்கி ஆளுநர், உயர் அதிகாரம் கொண்ட பதவிகளிலும் பார்ப்பனர்கள்தான். தேர்தல் ஆணையமும் ‘அவாள்’ வசம்தான்!

நாடாளுமன்றத்தின் 120 துறை செயலாளர்களில் தாழ்த்தப்பட்டவரோ, பிற்படுத்தப்பட்டவரோ இல்லை. அத்தனையும் பார்ப்பனர்களும் உயர்ஜாதியினரும்தான். இப்போது அமைச்சரவை செயலாளராக இருப்பவர் அஜித்குமார் சேத் எனும் பார்ப்பனர். 2011 ஆம் ஆண்டு அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட இவரின் பதவிக் காலம் ஏற்கனவே முடிந்து, பலமுறை பதவி நீட்டிப்புத் தரப்பட்ட நிலையில் இப்போது மோடி ஆட்சியும் அவருக்கு பதவி நீட்டிப்புக்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறது. நிதித் துறை செயலாளராக உள்ள இராஜிவ் மெஷ்ரிஷ்; பெட்ரோலியத் துறை செயலாளர் சவுராஷ்சந்த்ரா, எரிசக்தித் துறை செயலாளர் பி.கே. சின்ஹா போன்ற பார்ப்பன உயர்ஜாதியினர் அமைச்சரவை செயலாளருக்காக முயன்று பார்த்ததாக செய்திகள் கூறுகின்றன. இந்திய உளவுத் துறையின் (அய்.பி.) தலைவர் பதவியில் எப்படியோ அதிசயமாக ஒரு முஸ்லிம் (சையத் ஆசித் இப்ராஹிம்) அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் நியமிக்கப்பட்டு இப்போது அவர் பதவி ஓய்வு பெற்றவுடன் தினேஷ்வர் சர்மா என்ற பார்ப்பனரை மோடி ஆட்சி நியமித்துவிட்டது.

அதுமட்டுமல்ல, பார்ப்பனர்கள் ‘புரோகிதர்’ வேலைகளையும் கார்ப்பரேட் கலாச்சாரத்துக்கு உயர்த்தி விட்டார்கள். ஒரு காலத்தில் ‘பிராமணன்’ கடல் தாண்டுவது ‘பாவம்’ என்று கூறிக் கொண்டிருந்தவர்கள். இலண்டன் வட்ட மேஜை மாநாட்டில் பங்கேற்கச் சென்ற இந்து மகாசபை பார்ப்பனர் மதன் மோகன் மாளவியா, கடல் தாண்டும் ‘பாவத்தைப் போக்க’ இந்தியாவிலிருந்து மண்ணையும் கங்கையிலிருந்து நீரையும் எடுத்துச் சென்றார். இப்போது பார்ப்பனர்கள் கடவுள்களையே கடல்தாண்டி கடத்திக் கொண்டிருக்கிறார்கள். 1970இல் அமெரிக்காவில் இருந்த இந்து கோயில் ஒன்றே ஒன்றுதான். இப்போது 700 இந்து கோயில்கள் வந்துவிட்டன. அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள இந்த இந்துக் கோயில்களுக்கான அறங்காவலர்களையும் அர்ச்சகர்களையும் அனுப்பி வைக்கும் வேலையை காஞ்சி சங்கர மடம் செய்து கொண்டிருக்கிறது. இதற்காகவே ‘மக்கள் தொடர்பு அதிகாரி’ என்ற பதவியில் அமர்த்தப்பட்டுள்ள சந்திரசேகர் எஸ்.மேத்தா எனும் பார்ப்பனர் ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேட்டுக்கு (டிசம்பர் 14, 2014) அளித்த பேட்டியில், “இளம் அர்ச்சகர்கள் மிகவும் ஆர்வத்தோடு வெளிநாட்டுக்குப் போய் கார், பங்களாக்களை வாங்கிக் கொண்டு வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்” என்று பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார். 2012-2013 ஆம் ஆண்டுக்கிடையில் 930லிருந்து 1,149 அர்ச்சகர்களுக்கு அமெரிக்க கோயில்களில் ‘அர்ச்சனை’ செய்ய விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக சென்னையில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார். அர்ச்சகர்களுக்கு சமஸ்கிருத மந்திரம் மட்டும் தெரிந்தால் போதாது. ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டும் என்ற அடிப்படை யில் முன்னுரிமை தரப்படுகிறது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன. ஒரு காலத்தில் ஆங்கிலத்தை ‘மிலேச்ச பாஷை’ என்று தூற்றியவர்கள் இவர்கள் தான்! அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராக ஆகமத்தில் இடமில்லை என்று அடம்பிடிக்கும் இதே கூட்டம்தான் அர்ச்சகர் தொழிலை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து அதை கார்ப்பரேட் கலாச்சாரங்களாக்கிக் கொண்டிருக் கின்றன.

இப்படி சமுக-பொருளாதார- அரசியல்களை நிர்ணயிக்கும் ஆதிக்க சக்திகள் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளால் எல்லாவற்றையும் இழந்து “நடுத்தெரு நாராயணன்களாக” நிற்பதாக எழுதுவதில் ஏதேனும் துளியாவது உண்மை உண்டா என்று கேட்கிறோம்!

“பார்ப்பனர்கள் ஆதிக்கம் இப்போதெல்லாம் இல்லை சார்” என்று சாய்வு நாற்காலியில் ஆடிக் கொண்டு சமுகத்தை மதிப்பிடுவோரும் இந்த உண்மைகளை கண்திறந்து பார்க்கட்டும்!

# இளமையை தொலைத்த பேரறிவாளனும் 'பிரிட்ஜ்மேனும்'

அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தில் ஒரு உணர்ச்சிகரமான நிகழ்வு நடந்துள்ளது. கொலை வழக்கில் சிக்க வைக்கப்பட்டு, இளமைக் காலம் முழுதும் 27 ஆண்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த ஒருவர், இப்போது நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ரோனி பிரிட்ஜ்மேன் என்ற கருப்பர் இனத்தைச் சார்ந்த அவர், விடுதலை செய்யப்பட்டதற்கான காரணம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். "இவர்தான் கொலைகாரர்; அதை நான் நேரில் பார்த்தேன்" என்று அமெரிக்க போலீஸ் ஒரு 12 வயது சிறுவனைப் பிடித்து பொய்சாட்சி சொல்ல வைத்தது. இந்த சம்பவத்தை 2011இல் 'சீன்' என்ற அமெரிக்க பத்திரிகையின் செய்தியாளர், மீண்டும் புலனாய்வு செய்தார். போலீஸ் பொய் வழக்கை தயாரித்தது உண்மை என்று தெரிந்தவுடன், "அப்பாவிகளுக்காக உதவும் வழக்கறிஞர் குழு" பிரிட்ஜ்மேனுக்காக வழக்கை நடத்த முன் வந்தது. 27 ஆண்டுகளுக்கு முன் பொய் சாட்சி சொன்ன 12 வயது சிறுவன், தனது சாட்சியத்தை திருத்திக் கொள்ள விரும்புவதாக நீதிமன்றத்தில் கூறினார். இப்போது நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது. 'பொய் சாட்சியம்' என்பது தெரிந்தவுடன், அமெரிக்க நீதிமன்றம் உடனே விடுதலை செய்து விட்டது.

ஆனால் இராஜிவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 24 ஆண்டுகளாக சிறையில் வாடும் பேரறிவாளன் தந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தவறாக 'திருத்தி' எழுதியது உண்மைதான் என்று, வாக்கு மூலம் கொடுத்தார் - தியாகராஜன் என்ற புலனாய்வு அதிகாரி. பேரறிவாளனை விடுதலை செய்ய வேண்டும்; அவர் குற்றமற்றவர் என்று அவரே கூறிய பிறகும், இந்திய நீதிமன்றம் அதை பொருட்படுத்த தயாராக இல்லாமல் காலம் கடத்திக் கொண்டே இருக்கிறது.

விடுதலையான ரோனி பிரிட்ஜ்மேன், "என்னுடைய இளமைக் காலம் முழுதும் கொள்ளை போய் விட்டதே" என்று கதறியழுதார். அதேபோல்தான் தனது இளமைக் காலத்தை சிறையிலேயே தொலைத்தவர் தான் நமது பேரறிவாளன். அமெரிக்காவில் 'மனசாட்சி'யும், நேர்மையும் கொண்ட நீதிபதிகளும் இருக்கிறார்கள் என்பதை உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறது இந்தத் தீர்ப்பு.

### ஆர்.எஸ்.எஸ். 'பொய்யர்கள்'

தொலைக்காட்சி வாதங்களில் பேசுவதற்கு வரும் 'சங் பரிவாரங்கள்' - ஏதோ, தமிழ் நாட்டையே தங்கள் பார்ப்பன மேலாண்மைக்குள் கொண்டு வந்து விட்டதுபோல பேசத் தொடங்கி விட்டார்கள். ஆணவம், அதிகாரம் அவரது பேச்சுகளில் காணக் கிடக்கிறது. உண்மைக்கு மாறான தகவல்களை முன் வைப்பதிலும் அவர்கள் வெட்கப்படுவதே இல்லை. 'தலித்' என்ற மராட்டிய சொல்லை, 'சமஸ்கிருதம்' என்று ஒருவர் உளறுகிறார். அது மராட்டிய சொல் என்று எடுத்துக் கூறிய பிறகும், அவர் ஏற்க தயாராக இல்லை. 'பகவத் கீதை'யை தேசிய நூலாக்குவது சரி என்று வாதாட வந்த ஒரு ஆர்.எஸ்.எஸ்.காரர், அரசியல் சட்டத்தின் முகப்புரையிலேயே - இராமாயணம், மகாபாரதம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று ஒரு போடு போட்டார். எந்தப் பிரிவில் இருக்கிறது என்று கேட்டதற்கு, "இருக்கிறது; என்னால் நிரூபிக்க முடியும்" என்று சவால் விட்டார். இது அப்பட்டமான பொய். 'பகவத் கீதை'யை தேசிய நூலாக்கும் முயற்சியை எதிர்த்து தலையங்கம் தீட்டிய 'இந்து' ஆங்கில நாளேடு (டிசம்.10, 2014), இது குறித்து ஒரு வரலாற்று செய்தியை பதிவு செய்திருக்கிறது.

"ஆண் கடவுள்களானாலும், பெண் கடவுள்களானாலும், தேசிய பண்பாட்டுக் கூறுகளோடு கடவுள்களை இணைத்தல் வைத்தல் கூடாது" என்று அரசியல் சட்டத்தை உருவாக்கிய காலத்திலேயே திட்டவட்டமாக முடிவெடுக்கப் பட்டுவிட்டது. உண்மையில் அரசியல் சட்டத்தின் முகப்புரையை 'கடவுள் பெயரால்' தொடங்கலாம் என்ற ஒரு கருத்து முன்வைக்கப்பட்டபோது அதற்கு, அரசியல் நிர்ணய சபையில் கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. தங்களை தீவிர கடவுள் நம்பிக்கையாளர்களாக அறிவித்துக் கொண்டவர்கள்கூட இதை ஏற்கவில்லை. அரசியல் சட்டம் வழங்கியுள்ள 'மனசாட்சி' சுதந்திரம், "ஒருவர் எந்த மதத்தையும் ஏற்பதற்கோ அல்லது மதம் வேண்டாம் என்று மறுப்பதற்கோ உரிமை அளிக்கிறது. இந்த நிலையில் எந்த ஒரு மதத்தின் 'புனித' நூலையும் தேசிய நூலாக்குவது அரசியல் சட்டம் வலியுறுத்தும் மதச்சார்பின்மைக்கு நேர் எதிரானது" என்று 'இந்து' ஆங்கில நாளேட்டின் தலையங்கம் படம் பிடிக்கிறது. ஆர்.எஸ்.எஸ்.சார் பொய் அம்பலமாகிவிட்டதே! தொலைக்காட்சி விவாதங்களை பார்ப்பவர்கள் தெளிவும் மதிநுட்பமும் சிந்தனையும் நிறைந்தவர்கள் என்பதை 'சங் பரிவாரங்கள்' புரிந்து கொள்ளவே மாட்டார்கள் போலிருக்கிறது.

### மும்பை மாநகராட்சியின் அதிரடி

சென்னை போன்ற நகரங்களில் முஸ்லிம்கள், தலித் மக்களுக்கு வீடு வாடகைக்குக் கிடைப்பது அவ்வளவு எளிது அல்ல; தலித் மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில்கூட மாட்டுக்கறி சாப்பிடுவோருக்கு வாடகைக்கு விடமாட்டோம் என்று இப்போது சிலர் புறப்பட்டிருக்கிறார்கள். மாதம் ரூ50,000 அளவுக்கு வாடகைக்கு வீடு எடுப்பவர்களுக்குக்கூட அசைவம் சமைக்க தடை விதிக்கிறார்கள் பார்ப்பனர்கள். இப்போது பல அடுக்கு மாடி குடியிருப்புகள் பார்ப்பனர்களுக்கு மட்டும் என்று கட்டப்பட்டு வருகின்றன. ஒரு முறை 'இந்து' நாளேட்டில் 'பிராமின்ஸ் ஒன்லி' என்று விளம்பரமே வெளிவந்து, பிறகு மறைந்த மருத்துவர் இனியன் இளங்கோ, அது குறித்து பத்திரிகை கவுன்சிலுக்கு புகார் தந்து, பல மாதங்களுக்குப் பிறகு அந்த ஏடு அதற்கு வருத்தம் தெரிவித்தது.

இந்த நிலையில் மும்பை மாநகராட்சி பாராட்டத் தக்க ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. "சைவம் சாப்பிடுவோருக்கு மட்டுமே வீடு என்று வாடகைக்கோ விற்பனைக்கோ நிபந்தனை விதித்தால் வீடு கட்டுவதற்கு மாநகராட்சி வழங்கிய அனுமதி இரத்து செய்யப்படும்" என்று தீர்மானம் கூறுகிறது. மும்பை மாநகராட்சி சிவசேனை கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆனாலும் இது பாராட்டுக்குரிய நடவடிக்கை என்பதில் சந்தேகமே இல்லை. சென்னை மாநகராட்சி இப்படி ஒரு தீர்மானத்தை கொண்டு வரக் கூடாதா?

### 'கோட்சே' தேசபக்தராம்

'காந்தியை கொலை செய்த கோட்சே, காந்தியைப் போலவே ஒரு தேசபக்தர்தான்' என்று பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பேசியிருக்கிறார். உ.பி. உன்னனோ தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 'சாமியார்' கோலத்தில் காட்சி அளிக்கும் இவரது பெயர் 'சக்ஷி மகராஜ்'. தொலைக்காட்சி அலை வரிசைகள் அவரது உரையை நேரடியாகவே ஒளிபரப்பிவிட்டதால் உண்மையை மறைக்க முடியவில்லை. மாநிலங்களவையிலும் மக்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரச்சினையை கிளப்பவே, பா.ஜ.க. அணியினர் தடுமாறினர். மூச்சுக்கு மூச்சு மோடி இப்போது எல்லாம் காந்தியைப் பேசி வந்தாலும், இவர்களின் உள்ளத்தில் புதைந்து கிடப்பது கோட்சே பக்திதான் என்பது அவ்வப்போது வெளிச்சத்துக்கு வருகிறது. 'கோட்சே' சீடரான அந்த நாடாளுமன்ற உறுப்பினர், தனது கருத்தை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும், அப்படி பேசியதற்கு வருத்தம் தெரிவிப்பதாகவும் அறிவித்தார்! ஏற்கெனவே ஒரு பெண் அமைச்சர், "இராமனுக்குப் பிறந்தவர்கள் நாட்டை ஆள வேண்டுமா? அல்லது முறைதவறிப் பிறந்தவர்கள் நாட்டை ஆள வேண்டுமா?" என்று பேசியதற்கு எதிர்ப்பு கிளம்பிய பிறகு வருத்தம் தெரிவித்தார். மகாராஷ்டிராவில் கோட்சேயை புகழ்ந்து ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ஒரு நாடகம் நடத்த திட்டமிட்டனர். காங்கிரஸ் காட்டிய எதிர்ப்பால், பிறகு அத்திட்டம் கைவிடப்பட்டது. ஆட்சிக் காலத்துக்குள் இவர்கள் கோட்சேவுக்கு சிலை வைத்தாலும் வியப்பில்லை!

### 'பசுமேத யாகம்'

பொள்ளாச்சியிலிருந்து கேரளாவுக்கு லாரிகளில் கொண்டு போகப்படும் மாடுகளை மறித்து, ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அரியானாவில் மாட்டை வெட்டினார்கள் என்று இந்த கூட்டம் தலித் மக்களை அடித்தே கொன்றது. ஆனால், ஒரே நேரத்தில் 5 இலட்சம் ஆடுமாடுகளை பலியிடும் பலித் திருவிழா, நேபாளத்தில் எல்லை ஓரமாக இருக்கும் பாரா எனும் மாவட்டத்தில் ஆண்டு தோறும் நடக்கிறது. இங்குள்ள 'கதி மாய' கோயிலில் நடக்கும் இந்த உயிர்ப் பலிதான், உலகிலேயே அதிக எண்ணிக்கையில் ஒரே நேரத்தில் நடப்பதாகும். கடந்த நவம்பர் 29, 30ஆம் தேதிகளில் 5 இலட்சம் ஆடு மாடுகள் வெட்டப்பட்டன. உ.பி., பீகார், மேற்கு வங்கத்திலிருந்து கால்நடைகள் அழைத்துச் செல்லப்படுகின்றன. சூரிய உதயத்துக்கு முன் பார்ப்பனர்கள், 'பசுமேத யாகம்' நடத்தி, பலியைத் தொடங்கி வைக்கிறார்கள். மாடுகள் வெட்டுவதை எதிர்த்து ஆங்காங்கே கலவரம் செய்யும் சங் பரிவாரங்கள் இதை மட்டும் வேடிக்கைப் பார்ப்பது ஏன்?

### இராஜபக்சேவுக்கு ஆசி வழங்கிய பார்ப்பனர்கள்

இனப்படுகொலை செய்துவிட்டு ஏழுமலையானை தரிசிக்க வந்தால் அதை கோயில் நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும். அதற்கெல்லாம் ஆகமவிதிகள் எதுவும் கிடையாது போலும்! உண்டியலில் போடும் கருப்புப் பணத்தையும், கள்ள மார்க்கெட் கடத்தல் பேர்வழிகளையும் ஏற்றுக் கொள்ளும் "ஏழுமலையான்", இனப் படுகொலை செய்தவர்களை மட்டும் ஏற்றுக் கொள்ள மாட்டானா, என்ன? ஏழுமலையான் ஏற்கிறானா? இல்லையா? என்பது ஒருபுறம் இருக்கட்டும் . திருப்பதி நிர்வாகமும், வேத பண்டிதர்களும் வரவேற்று ஆசி வழங்க தயாராகவே இருக்கிறார்கள். கோயிலில் உள்ள ரெங்கநாயக்கர் மண்டபத்தில் இராஜபக்சேவுக்கு லட்டு, தீர்த்தப் பிரசாதம், ஆன்மிக புத்தகங்களை வழங்கியதோடு, வேத பண்டிதர்கள் வேத மந்திரம் ஓதி, ஆசி வழங்கினார்களாம். எதற்கு? இனப்படுகொலையை நடத்தி முடித்ததற்கா?

இராஜபக்சே வருகைக்காக கோயிலின் நான்கு மாடவீதிகளில் இரும்புக் கதவுகள் அடைக்கப்பட்டு, பக்தர்களுக்கு 'அங்கப் பிரதட்சணை' டிக்கட் வழங்குவது நிறுத்தப் பட்டதாம். ஈழத்தில் இந்துக் கோயில்களை இடித்துவிட்டு திருப்பதி கோயிலில் தரிசனம் செய்துவிட்டால் போதுமா? என்று நியாயமான கேள்வியை எழுப்பியிருக்கிறார் 'வைகோ'. வெளியுறவுக் கொள்கைகளை உருவாக்கும் இந்திய பார்ப்பன அதிகார வர்க்கத்தை தனக்கு எப்போதும் ஆதரவாக வைத்திருப்பதே இராஜபக்சேயின் திருப்பதி வருகை என்ற செய்தியும் உலா வந்து கொண்டிருக்கிறது. ஆக இந்திய பார்ப்பன அரசியலை இராஜபக்சே புரிந்து வைத்திருப்பார் போலிருக்கிறது! "திருப்பதியில் லட்டு தயாரிப்பில்கூட பார்ப்பனர்கள் மட்டும்தான் ஈடுபடுத்தப்படுகிறார்களாம். அதுதான் அய்தீகம் என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள்" என்று ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த பிருந்தாகாரத்.

### ஆர்.எஸ்.எஸ்சை எதிர்க்கும் சாமியார்கள்

ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் இப்போதெல்லாம் '5 நட்சத்திர' ஓட்டல் கலாச்சாரத்தில் ஆடம்பரமாக வாழத் தொடங்கி விட்டார்கள். ஆர்.எஸ்.எஸ். 'ஆன்மிக'த்தை கை கழுவி 'அசுர சக்தி'யாக மாறி வருகிறது என்ற குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. கூறுவது யார் என்பதுதான் வியப்புக்குரியது. உ.பி.யில் உள்ள 'இந்துஸ்தான் மோட்சா' என்ற அமைப்பைச் சார்ந்த இந்து சாமியார்கள்தான், இப்படி வெளிப்படையாக குற்றம்சாட்டி இருக்கிறார்கள். உ.பி. மாநிலம் காசியாபாத்தில் இதற்காக வரும் மார்ச் மாதம் 3 நாள் மாநாடு நடத்தப் போவதாகவும் இந்த அமைப்பின் தலைவரான யதிநரசிங்கானந்த சரசுவதி எனும் பார்ப்பனர் தெரிவித்துள்ளார்.

– இரா

**அடுத்த இதழில்**

2014 ஆம் ஆண்டில் கழகத்தின் செயல்பாடுகள் குறித்த செய்தி தொகுப்பு வெளி வருகிறது.

DATE OF PUBLICATION 17.12.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டனர்!



(முதல் பக்கத் தொடர்ச்சி)

கொலை முயற்சி வழக்கைப் பதிவு செய் என்ற ஒற்றை முழக்கத்தோடு சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் டிசம்பர் 9 ஆம் தேதி பகல் 11 மணியளவில் நடைபெற்றது. தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு ஏற்பாடு செய்த இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் பங்கேற்றனர். கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரும் தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவருமான வேல்முருகன், நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.

சென்னை சேப்பாக்கத்தில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு இறுதி வரை காவல்துறை அனுமதி தராமல் இழுத்தடித்தது. கடைசியாக 8 ஆம் தேதி இரவு காவல்துறை உயரதிகாரிகள் அனுமதி வழங்கினர். அனுமதி மறுத்தால் மாநகர காவல்துறை ஆணையர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. இரவோடு இரவாக மேடைகள் அமைக்கப்பட்டன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கழகத் தோழர்கள் ஏராளமாக திரண்டு வந்திருந்தனர். இடி முழக்கமாய் கண்டனங்கள் வெடித்துக் கிளம்பின. பெரியார் இயக்கத்தின் தொண்டரை இவ்வளவு கொலைவெறியோடு தாக்குதல் நடத்தியது ஏன்? குற்றவாளிகளுக்கும் சமூக விரோதிகளுக்கும் துணைபோகும் காவல்துறை கொள்கைக்காக போராடும் இயக்கங்களின் தொண்டர்களை ஏன் குறி வைக்கிறது? கொலை வெறித் தாக்குதல் நடத்திய அபிராமபுரம் உதவி ஆய்வாளர்கள் இளையராஜா, கலைச்செல்வி மற்றும் ஏட்டு வடிவேலு மீது கொலை முயற்சி வழக்கைப் பதிவு செய்ய வேண்டும். அதுவரை இந்தப் போராட்டம் ஓயப் போவது இல்லை என்று அனைத்துக் கட்சி மற்றும் இயக்கத்தைச் சார்ந்த தலைவர்களும் கடுமையாக எச்சரித்தனர்.

கண்டன உரையாற்றியோர் விவரம்: திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி. வேல்முருகன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், தமிழ்நாடு மக்கள் கட்சி - அருண்சோரி, இளந்தமிழகம் - செந்தில், அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் - முகிலன், மே 17 - திருமுருகன், தமிழ் தேச மக்கள் கட்சி - தமிழ்நேயன், காஞ்சி மக்கள் மன்றம் - மகேஷ், தந்தை பெரியார் திராவிடர் கழகம் - ச. குமரன், கம்யூனிஸ்ட் கட்சி - மா.லெ. மக்கள் விடுதலை - சதீஷ், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி - வே. ஆனைமுத்து, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் - வழக்கறிஞர் பாவேந்தன், தமிழ் தேசிய பேரியக்கம் - பெ. மணியரசன், ம.தி.மு.க. - மல்லை சத்யா, எஸ்.டி.பி.ஐ. - தெகலான் பாகவி, தொழிலாளர் சீரமைப்பு இயக்கம் - சேகர், மரண தண்டனைக்கு எதிரான மக்கள் இயக்கம் - செல்வராஜ், ஓவியர் - வீர. சந்தானம், தமிழர் முன்னேற்றப் படை - வீரலட்சுமி, தமிழர் விடுதலைக் கழகம் - சுந்தர மூர்த்தி, தமிழ்ப் புலிகள் - கலைவேந்தன், விடுதலைத் தமிழ்ப் புலிகள் - குடந்தை அரசன், பெண்கள் செயற்பாட்டுக் களம் - வழக்கறிஞர் கயல், தமிழ்த் தேச மக்கள் கட்சி - வழக்கறிஞர் புகழேந்தி, தமிழ்த்தேச விடுதலை இயக்கம் - தியாகு, மாணவர் இயக்கங்களின் சார்பாக பிரதீப், செம்பியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். பிற்பகல் 3 மணி வரை ஆர்ப்பாட்டம் நடந்தது.

## உயர்நீதிமன்ற புதிய நியமினங்களில் மேலும் பார்ப்பனர்களை நியமிக்க முயற்சியா?

சென்னை உயர்நீதிமன்றத்தில், நீதிபதிகளுக்கான 60 இடங்களில் தற்போது 43 நீதிபதிகள் மட்டுமே உள்ளனர். 17 பேருக்கான தேர்வு இரண்டு கட்டங்களாக நடக்க இருப்பதாக தெரிகிறது. காலியாக உள்ள 17 நீதிபதிகள் பதவிகளில் பார்ப்பனர்களைக் கொண்டு வரும் முயற்சிகள் நடப்பதாக அறிகிறோம். ஏற்கெனவே தலைமை நீதிபதி, இரண்டாவதுநிலையில் உள்ள நீதிபதி உள்பட 7 பார்ப்பனர்கள் இருக்கும் நிலையில், மேலும் பார்ப்பனர்களை நியமிப்பது சமூகநீதிக்கு எதிரானதாகும். இதில் பார்ப்பனரல்லாதவர்களை தேர்வு செய்வதற்கு 50 வயதுக்கு மேலும், பார்ப்பனர்களுக்கு மட்டும் 50 வயதுக்கு கீழே உள்ளவர்களாக தேர்வு செய்யவும் ஏற்பாடுகள் நடப்பதாக தெரிகிறது. 50 வயதுக்குள்ளே தேர்வு செய்யப்படும் பார்ப்பனர்கள், உச்சநீதிமன்றம் வரை செல்லவும் நீதிபதிகளை தேர்வு செய்யும் 'கொலிஜியத்தில்' இடம் பெறவும் இயலும் என்பதால் இப்படி ஒரு சதி திட்டமிடப்படுகிறது.

சமூக நீதிக்கு இந்தியாவுக்கே வழிகாட்டிய மாநிலம் தமிழகம். எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராக இருந்தபோது இதே போன்று பார்ப்பனர்களை அதிகமாகக் கொண்ட நீதிபதிகள் பட்டியல் தயாரிக்கப்பட்டபோது அது 'தமிழக உளவியலுக்கு' (Soil Psychology) எதிரானது என்று எதிர்ப்பு தெரிவித்து தடுத்து நிறுத்தினார்.

உச்சநீதிமன்றம்கூட நீதிபதி நியமனங்களில் பிரதிநிதித்துவம் கிடைக்காத சமூகத்தினருக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று ஒரு வழக்கில் (காந்தி எதிர் இந்திய அரசு) எடுத்துக்கூறி உயர்நீதிமன்றங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. மீனவர், யாதவர், பொற்கொல்லர், குயவர், வண்ணார், முடிதிருத்துவோர், காட்டு நாயக்கர் போன்ற எத்தனையோ சமூகப் பிரிவினர் உயர்நீதிமன்ற நீதிபதியாக வர முடியாத நிலையில் இந்த சமுதாயத்தினருக்கு வாய்ப்பு தரப்பட வேண்டும். ஏற்கெனவே பார்ப்பனர் பிரதிநிதித்துவம் அதிகமாக உள்ள நிலையில் மேலும் பார்ப்பனர்களை நீதிபதிகளாக்கக் கூடாது; கூடவே கூடாது என்று வலியுறுத்துகிறோம்.


## ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு கருத்தரங்க உரைகள்: குறுந்தகடு தயார்!

ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு கருத்தரங்கில் பேராசிரியர் அருணன், சுப. வீரபாண்டியன், வழக்கறிஞர் அஜிதா, விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரைகள், குறுந்தகடாக 'திராவிடர் விடுதலைக் கழகம்' சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

விலை : ரூ. 50 தொடர்புக்கு : 9884754080 / 044-2498 0745

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 18th December 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2045 | டிசம்பர் 25, 2014 | புரட்சி 13 | முழக்கம் 50 | விலை: ரூ.3.00

## அடக்குமுறை – கருத்துரிமை பறிப்புகளை எதிர்த்து

# 2014இல் கழகத்தின் எதிர்நீச்சல் பயணம்

அடக்குமுறைகள், கருத்துரிமை பறிப்புகள் என்றுஅரசுகளின் தடைகளைத் தாண்டி, திராவிடர் விடுதலைக் கழகம் எதிர் நீச்சலில் களப்பணியாற்றிய ஆண்டு 2014. தமிழக உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் கூட்டங்கள் என்றாலும், பகுத்தறிவு பரப்புரையயானாலும் தமிழர் திருநாள் விழாவானாலும் திராவிடர் விடுதலைக் கழக செயல்பாடுகளுக்கு தொடர்ந்து தடைகளையும் அடக்குமுறைகளையும் ஏவிய தமிழக காவல்துறை அதன் வழியாக தனது ‘கொடூர முகத்தை’ வெளிச்சப்படுத்தியது.

இதற்காக கழகத் தோழர்கள் கொடுத்த விலை அதிகம். 8 மாதங்கள் வரை கழகத் தோழர்கள், கழகத் தலைவர் – தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறை யிலடைக்கப்பட்டனர். அடக்குமுறைகளை எதிர் கொண்ட கழகம், உறுதியாக தனது கொள்கைப் பயணத்தைத் தொடர்ந்தது. மக்கள் சந்திப்பு இயக்கம், கழகத் தீர்மானங்கள், விளக்கப் பரப்புரை, அகமண முறை எதிர்ப்புப் பரப்புரை, கிராமம் கிராமமாக பகுத்தறிவு பரப்புரை (சேலம் மேற்கு மாவட்டம் 20 ஊர்களில்) என்று ஒரே நேரத்தில் நான்கு பரப்புரை இயக்கங்களை – ஒரு வாரம், 10 நாள்கள், ஒரு மாதம் என்று நடத்தி கழகத்தினர் களச் செயல்பாடுகளில் சாதனை புரிந்தனர். கழகத்தின் வார ஏடு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ தனது பயணத்தை தொய்வின்றி தொடர்ந்தது. இயக்கம் சார்ந்த செயல்பாடுகளைத் தவிர, கூட்டியக்கங்களிலும் கழகம் தனது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வந்தது. கழகத்துக்கு பரப்புரை வாகனங்கள் வாங்கப்பட்டன. நாடாளு மன்றத் தேர்தலில் கொள்கைப் பார்வையில் ‘ஆதரவு’ நிலை எடுத்த கழகம், பார்ப்பன–இந்துத்துவ பரப்புரையையும் மேற்கொண்டது.

கட்டமைப்பு வலிமையோ, பொருளியல் சக்தியோ இல்லாத கொள்கை உறுதியைக் கொண்ட ஓர் பெரியாரியல் அமைப்பாக களப்பணியாற்றி வரும் திராவிடர் விடுதலைக் கழகம் 2013ஆம் ஆண்டில் கடந்து வந்த சுவடுகளின் தொகுப்பு இது:

**ஜனவரி:** ஓமாந்தூரார் தோட்டத்தில் தலைமைச் செயலகத்துக்காகக் கட்டப்பட்டு, பிறகு முதல்வர் ஜெயலலிதாவால் ‘சூப்பர் ஸ்பெஷாலிட்டி’ மருத்துவமனையாக அறிவிக்கப்பட்ட மருத்துவ மனையில் இடஒதுக்கீட்டைப் புறக்கணித்து, ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களை தேர்வு செய்யும் அரசு அறிவிப்பை எதிர்த்து மாவட்ட தலைநகர்களில் திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட் டங்களை (ஜன. 25இல்) நடத்தியது.

இராஜிவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனைக் குள்ளாகி 23 ஆண்டுகாலம் சிறையில் அடை பட்டிருந்த பேரறிவாளன், சாந்தன், முருகன் - தூக்குத் தண்டனையை நீண்டகாலமாக தாமதப்படுத்தி, நிறைவேற்றாததின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியது - இந்த ஜனவரியில் தான் (ஜன.21). திருப்பூரில் கழகம் தமிழர் திருநாள் விழாக்களை சிறப்பாக நடத்தியது.

தலைநகரில் கழகம், அனைத்துக் கட்சியினரையும் இணைத்து, பல ஆண்டுகளாக நடத்தி வரும் தமிழர் திருநாள் விழாவுக்கும் கடைசி நேரத்தில் காவல்துறை அனுமதி மறுத்தது. கழக வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை. அருண் முயற்சியால் உயர்நீதிமன்ற வழியாக தடையை தகர்த்து திட்டமிட்டபடி தமிழர் திருநாளை (ஜன.12) சிறப்பாக கழகம் நடத்தியது.

**பிப்ரவரி:** பெரியாரியலின் தேவையை காலத்தின் அறைகூவலுக்கேற்ப வளர்த்தெடுத்து வரும் திராவிடர் விடுதலைக் கழகம், சுயமரியாதைக கொள்கைகளோடு 1932இல் பெரியார் உருவாக்கிய சமதர்மத் திட்டத்தின் தற்போதைய வரலாற்றுத் தேவையை கருத்தில் கொண்டு சுயமரியாதை - சமதர்ம பரப்புரை இயக்கத்துக்கு திட்டமிட்டது; ஊர் ஊராக மக்களை நேரடியாகச் சந்தித்து, பார்ப்பன-பனியா-பன்னாட்டுச் சுரண்டல்களை விளக்கிடும் பரப்புரை இயக்கம் 10 நாள்கள் சுமார் 30 பகுதிகளில் நடந்தது. சிவகங்கையில் தொடங்கி, மேட்டூரில் நிறைவடைந்தது (பிப்.16-25). மேட்டூரில் பயண நிறைவு விழா, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ - ஜாதி எதிர்ப்பு மலர் வெளியீட்டு விழா நிகழ்ச்சி களோடு ‘தீ விரைவு’ என்ற அகமண முறையின் பாதிப்புகளை விளக்கிடும் ஆவணப் படமும் திரையிடப்பட்டது.

இராஜபக்சே கொழும்பில் கூட்டிய ‘காமன் வெல்த்’ மாநாட்டில் மன்மோகன்சிங் பங்கேற்பதை எதிர்த்து சேலம் வருமான வரித்துறை அலுவலக வளாகத்தில் மண்ணெண்ணெயில் தோய்த்த சாக்குப் பையை எரித்து வீசினார்கள் என்று தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகத் தோழர்கள் நங்கவல்லி கிருட்டிணன், அருண்குமார், அம்பிகாபதி ஆகியோர் 5 மாதம் சிறைவாசத்துக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டனர் (பிப்.15) - சேலம் சிறைவாசலில் உற்சாக வரவேற்பு தரப்பட்டது.

கோவை திராவிடர் விடுதலைக் கழகம், “காதலர் நாளை” மாநாடுபோல் சிறப்பாக கொண்டாடி, 46 ஜாதி மறுப்பு இணையர்களுக்கு விருதுகளை வழங்கியது (பிப்.14). ‘அகமண முறையை ஒழிப் போம்’ என்று முழக்கத்தை முன் வைத்து, பரப்புரைப் பயணம் காரைக்குடியில் தொடங்கியது (பிப்.16).

ராஜிவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கும் உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாக குறைந்ததைத் தொடர்ந்து, ஏற்கெனவே ஆயுள் தண்டனை பெற்றிருந்த 4 பேரையும் சேர்த்து 7 பேரையும் மாநில அரசுக்குரிய உரிமையைப் பயன்படுத்தி விடுதலை செய்யப்படு வார்கள் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பை தமிழக முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் அறிவித்தது, இதே பிப்ரவரியில் தான் (பிப்.19).

விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் ஒரு நாள் பரப்புரை இயக்கத்தை ஜாதி எதிர்ப்பை முன்வைத்து நடத்தியது. குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளின் ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி, மக்கள் வாழ்விட உரிமைக்காக திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது (பிப்.21) கோரிக்கை வெற்றி பெற்றது.

**மார்ச் :** சென்னையில் தலைமை நிலையத்தில் கழகத்தின் தலைமை செயற்குழு கூடியது (மார்ச் 11). தேர்தல் ஆணையம் - அரசியல் கட்சித் தலைவர்கள் சிலைகளை மூட ஆணையிட்ட உத்தரவைக் காட்டி, மன்னார்குடி, திருப்பூரில் பெரியார் சிலைகளை துணி போட்டு அதிகாரிகள் மூடியதை எதிர்த்து, உரிய அதிகாரிகளிடம் முறையிட்டு, மன்னை-திருப்பூர் கழகத் தோழர்கள் பெரியார் சிலை மூடப்பட்டதை அகற்றினர்.

நாகை மாவட்ட கழகம், மயிலாடுதுறையில் திராவிடர் விடுதலைக் கழக செயலவைக் கூட்டத்தை சிறப்பாக நடத்தியது (மார்ச் 29). நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. ஆட்சி அமையாது தடுக்கும் நோக்கத்தில் இடதுசாரி கட்சிகள், இஸ்லாமிய கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சிகளை ஆதரிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. தர்மபுரியில் ஜாதி வெறியை உசுப்பி விட்டு களத்தில் நின்ற பா.ம.க. வேட்பாளரை தோற்கடிக்க வேண்டும் என்ற முடிவையும் கழகம் எடுத்தது.

32 பேர் அமர்ந்து பயணிக்கக்கூடிய பரப்புரை வாகனம் - கழகத்துக்காக வாங்கப்பட்டது. மயிலாடு துறை மாநில செயற்குழுவில் தோழர்கள் பார்வைக்கு வாகனம் கொண்டு வரப்பட்டது. ஈரோடு மாவட்டக் கழகம் மற்றொரு வாகனம் வாங்கியது. பா.ஜ.க.வின் மதவெறி செயல்திட்டங்களை விளக்கி, ‘மோடித்துவ முகமூடி’ எனும் வெளியீட்டையும் கழகம் கொண்டு வந்தது.

இராஜபக்சே மீதான போர்க் குற்ற விசாரணையை நீர்த்துப் போக வைக்கும் இந்திய அரசின் முயற்சியைக் கண்டித்து ஆளுநரின் மாளிகையை நோக்கிய முற்றுகைப் போராட்டத்தில் கழகம் பங்கேற்றது; தோழர்கள் கைதானார்கள்.

**ஏப்ரல்:** சென்னை மாவட்ட கழகம், பா.ஜ.க. மதவெறி எதிர்ப்பு பரப்புரை கூட்டங்களை 6 நாள்கள் நகரில் பல்வேறு பகுதியில் தொடர்ந்து நடத்தியது. (ஏப்.5-10).


கழக ஆதரவுள்ள இணைய செயல்பாட்டாளர் களின் கலந்துரையாடல், சென்னையில் ‘பிரிட்ஜ் அகாடமி’ எனும் பயிற்சி மய்யத்தில் கூடி இணையதள செயல்பாடுகள் குறித்து விவாதிக்கப்பட்டது (ஏப்.6).

**மே:** நாடாளுமன்றத் தேர்தல் களம் சூடுபிடித் திருந்த சூழலிலும் கழகம் தனது இயக்கப் பணிகளைத் தொடர்ந்து நடத்தி வந்தது. பேராவூரணியில் கழகத்தின் ஒரு நாள் பயிலரங்கம் நடத்தப்பட்டது (மே 24). திருப்பூரில் கழக தலைமை செயற்குழு கூடியது (மே 31). கரூர்-திருச்சி பகுதிகளில் மக்கள் சந்திப்புத் திட்டத்தை கழகத்தின் பரப்புரை வாகனத்தைப் பயன்படுத்தி தோழர்கள் 9 நாள்கள் நடத்தினர். கழக செயல்பாடுகளை விளக்கும் துண்டறிக்கைகளை வழங்கி, நபர் ஒருவரிடம் ரூ.10 என்ற திட்டத்தோடு நன்கொடை திரட்டி, கழக நூல்களையும் விற்பனை செய்தனர் (மே 22-30). கழகத்தின் சார்பு அமைப்பான ‘தமிழ்நாடு அறிவியல் மன்றம்’ சார்பாக கொடைக்கானலில் ‘குழந்தைகள் பழகு பயிற்சி’ முகாம் சிறப்புடன் நடந்தது (மே 15-19).

**ஜூன் :** கோவை பகுதியில் இரண்டாம் கட்ட மக்கள் சந்திப்பு இயக்கத்தைத் தோழர்கள் நடத்தினர். கோவையில் கழக செயலவை கூடி முக்கிய முடிவுகளை எடுத்தது (ஜூன் 27). ஜூலை 17 தொடங்கி

(3ஆம் பக்கம்)

**டிசம்பர் 24**
**நினைவு நாள் சூளுரை!**



மதவாதம் இங்கே வளராது!

பெரியாரியம் அதை விடாது!

தலையங்கம்

## எது ‘தாய் மதம்’ ?

இந்துக்கள் அல்லாதவர்கள் – இந்து மதத்துக்கு திரும்புவது, மதமாற்றம் அல்லவாம்! அதற்குப் பெயர் ‘தாய் மதம் திரும்புதல்’ என்கிறது சங் பார்ப்பன பரிவாரம்! வழமைபோல் இதுவும் அவர்கள் முன் வைக்கும் ஒரு புரட்டுவாதம் தான்!

இந்தியாவில் வாழும் அனைத்து மக்களின் தாய் மதம் ‘இந்து’ என்றால், ‘இந்து’ என்ற சொல் – வேதம், புராணம், சமஸ்கிருதம் உள்ளிட்ட – எந்த நூலிலும் இடம் பெறாதது ஏன்? இது 1927 ஆண்டிலேயே பெரியார் எழுப்பிய கேள்வி; இதுவரை விடை கிடைக்காத கேள்வி.

பார்ப்பனர்கள் தங்களின் ‘பிதாமகனாக’ கொண்டாடும் இராஜகோபாலாச்சாரி எனும் இராஜாஜி, “இந்து மதம் என்பது அண்மைக் காலத்திய புதிய பெயர்” என்கிறார். (ஆதாரம்: Hinduism-Docrine and way of life) “இந்துமதம் தெளி வற்றது; வரையறை ஏதும் இல்லாதது” என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த நீதிபதி இராசமன்னார் ஒரு தீர்ப்பில் கூறினார். (மைக்கேல் எதிர் வெங்கடேசன் வழக்கு –1952) “இந்து என்ற சொல் வேதத்தில் சொல்லப்படவில்லை. மகா அலெக்சாண்டர் இந்தியா மீது படை எடுத்தபோது சிந்துவுக்கு கிழக்கே உள்ள மக்களை இந்துக்கள் என்று குறிப்பிட்டனர்” என்கிறார் காந்தியார் (‘அரிஜன்’ பத்திரிகை, 30.11.1947).

“இந்து சமூகம் என்பது ஒரு புனைவு” என்று கூறும் அம்பேத்கர், இந்து மதத்துக்கு ஒரு பொதுப் பெயர் இல்லாமல் போனதற்குக் காரணம், “இது ஒரு சமூகமாகவே உருவாகியது இல்லை; ஒரு சமூகமாக உணரப்படவும் இல்லை; எனவே அதற்கு பெயரே உருவாகாமல் போனது” – என்று தெளிவாக விளக்குகிறார்:

பவுத்தம், சமணம், சீக்கியம், சைவம் என்று பல்வேறு பெயர்களில் மதக் குழுக்கள் இருந்தன. இந்த மதக் குழுக்களுக்கிடையே சண்டைகளும் சச்சரவுகளும் நடந்தன. வழிபட்ட கடவுள்களும் வழிபடும் முறைகளும் வெவ்வேறாக இருந்தன. தமிழ்நாட்டில் சைவமும் வைணவமும் மோதிக் கொண்டு ஒரு பிரிவை மற்றொரு பிரிவு அழித்துக் கொண்டது. அது வைணவர்களை கழுவேற்றிக் கொலை செய்யப்படும் நிலைக்குச் சென்றது. இந்த நிலையில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் 19ஆம் நூற்றாண்டில் அதிகாரத்தில் பங்கு கேட்கும் போட்டியில் கிறிஸ்தவர், முஸ்லிம்களைவிட தங்களின் எண்ணிக்கை அதிகம் என்று காட்டத் துடித்த பார்ப்பனர்களுக்கு தங்களுடைய பார்ப்பன மதத்தின் எண்ணிக்கையை உயர்த்திக் காட்ட வேண்டிய அவசியம் நேர்ந்தது. எனவே கிறிஸ்து, முஸ்லிம் அல்லாத ஏனைய பல்வேறு பிரிவினரை ‘இந்து’ என்ற ஒற்றை அடையாளத்துக்குள் திணிக்க முயன்றதன் விளைவே ‘இந்து’ மத உருவாக்கம்.

அதே போன்று, ஆட்சி அதிகாரத்தை வைத்திருந்த பிரிட்டிஷ் ஆட்சி, இஸ்லாமியர், கிறிஸ்தவர் அல்லாதவர்கள் மீதான வழக்குகளை விசாரிப்பதற்காக, ஒரு சட்டத்தை உருவாக்க முயன்றபோது, அந்த சட்டத்துக்கான அடிப்படை நீதி நூலாக பார்ப்பனர்கள் பிரிட்டிஷாரிடம் ‘மனுதர்மத்தை’க் கொடுத்தனர். பிரிட்டிஷாரும் பார்ப்பனர்களும் சேர்ந்து உருவாக்கிய விதிகள்தான், இந்து மதத்தின் அடிப்படை கூறுகளானது. பிரிட்டிஷ் இந்தியாவின் தலைமை நீதிமன்றமாக இலண்டனில் இருந்த ‘பிரிவி கவுன்சில்’,

“இந்து மதம் பல்வேறு மதத்தின் கூறுகளை தனக்குள் உள்வாங்கிக் கொள்ளும் சக்தியும் நெகிழ்ச்சியும் கொண்டிருக்கிறது. பல மதப் பிரிவுகள், நூற்றுக்கணக்கான சாதியர், மிகப் பெரும் வேறுபாடுகள், வெவ்வேறு பழக்க வழக்கங்களைக் கொண்டது இந்துமதம். ஆனால், இதன் சமுதாய விதிகள் கடுமையானவை” என்று கூறியது. இந்த உண்மையை ஒப்புக் கொண்ட காஞ்சி ஜெயேந்திர சரசுவதி,

“வெள்ளைக்காரன் நமக்கு ‘இந்து’ என்று பொதுப் பெயர் வைத்தானோ, நாம் பிழைத்தோம்; அவன் வைத்த பெயர் நம்மைக் காப்பாற்றியது” (‘தெய்வத்தின் குரல்’ – பாகம் 1) என்று வெளிப்படையாகவே கூறி விட்டார்.

பார்ப்பனர்கள், வெவ்வேறு வழிபாட்டு முறைகளையும், பார்ப்பன மதப் பிடிக்குள் கொண்டு வந்து, பார்ப்பனரல்லாதவர்கள் அனைவரையும் தங்களின் அடிமைகளாக்கி, ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ என்று பெயர் சூட்டி விட்டார்கள். இதை ஆர்.எஸ்.எஸ்.சுக்கு கருத்தியலை வழங்கிய கோல்வாக்கர் தெளிவாகவே கூறுகிறார்:

“புருஷ சுக்தாவில் நம்மை உருவாக்கிய கடவுள் யார் என்பது கூறப்பட்டிருக்கிறது. அதுவே நமது இந்துக்களுக்கான அடையாளம்... பிராமணன் நமது கடவுளின் தலை; அரசர்கள் அவனது கைகள்; வைசியர்கள் அவனது தொடை; ‘சூத்திரர்’ கள் அவனது கால்; இந்த நான்கு பிரிவுகளைக் கொண்ட அமைப்புதான் நமது இந்து சமூகம் என்று வர்ணாஸ்ரம ஏற்றத் தாழ்வே இந்து சமூகத்தின் அமைப்பு” என்கிறார்.

வர்ணாஸ்ரமத்தில் பல்வேறு பிரிவுகளில் கலப்பு ஏற்பட்டு, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை எந்த வர்ணத்திலும் திணிக்க முடியாத நிலையில்தான் ‘ஜாதி’ கள் உருவாயின என்பதை அம்பேத்கர் மனுதர்மத்திலிருந்தே ஆதாரங்கள் காட்டி நிறுவியிருக்கிறார். ஆக, ‘தாய் மதம்’ என்று சங் பரிவாரப் பார்ப்பனர்கள் கூறும் இந்து மதம் என்பது பார்ப்பன மதத்தின் தலைமையை கட்டாயமாக்கி, அதன் கீழ் ‘ஜாதி அடிமைகளாக’ உழல வேண்டும் என்பதுதான். எனவே ‘தாய் மதம் திரும்புதல்’ என்பதே வேத மதத்தைத் திணிக்கும் ‘கட்டாய மதமாற்றம்’ தான்.

இந்தக் கட்டாயத் திணிப்பிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு, பார்ப்பன சிறையிலிருந்து தப்பித்தவர்களே, இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள். அந்தப் பார்ப்பன சிறையை உடைக்கும் சமூகப் புரட்சியை நிகழ்த்திவரும் புரட்சியாளர்களே, பெரியாரிஸ்டுகள்.

பிறக்கும் ஒவ்வொரு குழந்தை மீதும் மதம், ஜாதி அடையாளங்கள், அவர்கள் விருப்பமின்றியே திணிக்கும் பார்ப்பனியத்தின் ‘இரும்பு விலங்கை’ உடைத்தெறியும் சமூக நீதிப் போராட்டம் தான், பார்ப்பன எதிர்ப்புப் போர்.

தாய் மதத்துக்கு திரும்புவதாகக் கூறும் சங்பரிவாரங்களுக்கு இறுதியாக ஒரு கேள்வி!

தாய் மதம் திரும்புவோரை “பிராமணர்களாக” ஏற்று, அவர்களுக்கு அர்ச்சகர் பயிற்சி அளித்து, ஆகமக் கோயிலுக்கு அர்ச்சகராக்கவோ, ‘குடமுழுக்கு’ நடத்தும் அதிகாரம் வழங்கவோ, சங்கராச்சாரிகளாகும் வாய்ப்புகளை வழங்கவோ தயாரா? தனது பிள்ளைகளுக்குள்ளேயே ஏற்றத் தாழ்வை நிலைநிறுத்தும் ஒரு மதத்தை ‘தாய்’ என்று கூறி கேவலப்படுத்த வேண்டாம்!

மதம் மாறவும் – மதத்தை தூக்கி எறியவும் அனைவருக்கும் உரிமை உண்டு.

## பகவத்கீதைப் பற்றி விவேகானந்தர் கூறியது என்ன?

பகவத் கீதையை தேசிய நுலாக்க முயற்சிக்கிறது மோடி அரசு. இவர்கள் போற்றும் விவேகானந்தரே, பகவத் கீதை மீதான சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார். அக்கருத்துகளின் தொகுப்பு இது.

கீதை மகாபாரதத்தின் ஒரு பகுதியாக உள்ளது. வியாசரால் நூல் எழுதப்பட்ட காலத்திலேயே கீதையும் அதனுடன் இருந்ததா அல்லது பிற்காலத்திலேயே கீதையும் அதனுடன் இருந்ததா அல்லது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டும். கிருஷ்ணன் எனும் பெயரால் வரலாற்றில் யாரேனும் இருந்தாரா? குருச்சேத்திரப் போர் உண்மையில் நடந்ததா? அர்ச்சுனனும் அவனைப் போன்ற பிறரும் வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்தவரா என்பதையெல்லாம் ஆழ்ந்து யோசிக்க வேண்டும்.

வேத வியாசர் என்ற பெயரில் பற்பல காலகட்டங்களில் பலர் வாழ்ந்துள்ளனர். இவருள் கீதையை எழுதியவர் யார்? வியாசர் என்பது ஒரு பட்டம்தான். தனிப்பட்ட யாருடைய பெயரும் அல்ல. புராணங்களை இயற்றுகின்ற எவரையும் வியாசர் எனும் பெயரால் அழைப்பது அக்காலத்திய மரபு.

ஆதிசங்கரர் பகவத் கீதைக்கு விளக்கவுரை எழுதுவதற்கு முன்னர் கீதை எனும் நூலைப் பொது மக்கள் யாரும் அறிந்திருக்கவில்லை. போதாயனர் எனும் பெரும் புலவர் வேதாந்த சூத்திரங்களுக்கு உரையெழுதினார் என்று கூறுவர். இவரே கீதைக்கும் உரை எழுதியவர் என்றும் கூறப்படுகிறது.

விவேகானந்தர் இந்திய நாடெங்கணும் சுற்றுப் பயணம் செய்த காலத்தில் ஓரிடத்திலாவது போதாயனபாஷ்யம் எனும் உரை நூலைக் காண இயலவில்லை. இப்படி மிகப் பழமையான போதாயனர் கீதைக்கும் உரையெழுதினார் என்று கூறுவதும், அதன் மூலம் கீதையின் தொன்மையை மறைமுகமாகச் சுட்டிக்காட்ட முயல்வதும் பயனற்ற வீண் வேலையாகும்.

கிருஷ்ணன் எனும் நபர் இருந்திருப்பாரா என்பதும் அய்யத்துக்கிடமானதாகவே உள்ளது. சாந்தோக்ய உபநிடத்தில் ஓரிடத்தில் கிருஷ்ணனைப் பற்றிய குறிப்பு உள்ளது. கிருஷ்ணன் தேவகியின் மகன் என்றும், யோகியரிடமிருந்து ஆன்மிக அறிவினைப் பெற்றார் என்றும் அக்குறிப்பு கூறுகின்றது. பாரத காவியம் கிருஷ்ணனைத் துவாரகையின் அரசன் என்று கூறுகிறது. கோபியருள் அவன் லீலைகள் செய்ததை விஷ்ணு புராணம் பேசுகிறது. பாகவத புராணம் கிருஷ்ணன் செய்த ரச லீலைகள் பற்றி விவரமாகக் கூறுகிறது. பழங்காலத்தில் நடந்த மன்மத உற்சவமே கண்ணன் மீது திணிக்கப்பட்டதாகக் கருதலாம்.

வரலாற்றுச் சிந்தனை பண்டைக் காலத்தே மிகவும் குறைவாக இருந்தது. ஆன்மிகக் கருத்துகளும், தெய்வீகச் செயல்களாகக் கருதப்படுவனவும், அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டன. பாரம்பரியமாகவும், செவி வழிச் செய்தியாகவும் அவை காலங்காலமாக நிலை பெற்றுவிட்டன. பண்டைக் காலத்திய மக்களுக்குப் பூகோள அறிவு கிடையாது. பாற்கடல், தயிர்க்கடல், இனிப்புக் கடல் என்று பற்பல கடல்கள் கற்பனையாகவே இருந்தன. ஒருவன் நூறாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தான் என்றும் கூறுவர். வேதங்களோ மனிதன் பல நூறாண்டு வாழ்கிறான் என்றே சொல்லுகின்றன. இத்தகைய ஒரு புராணிகக் கற்பனைச் சூழலில் யார் சொல்வதை ஏற்பது? கிருஷ்ணனைப் பற்றியும் ஒரு தெளிவான முடிவை மேற்கொள்வது என்பது முற்றிலும் இயலாத காரியமாகும். ஒருவனைப் புகழ்வதாயின், மனித சக்திக்கு மேம்பட்ட இயல்புகள் அவனிடம் இருப்பதாகக் கூறுவது இயல்பாக இருந்தது. கிருஷ்ணனைப் பொறுத்தவரை இதுதான் நடந்துள்ளது. பிரம்ம ஞானத்தைப் பெரிதும் அரசர்களே போதித்தனர் என்பதால், கிருஷ்ணன் ஒரு அரசனாக இருந்திருக்கலாம்.

மகாபாரதம் முழுவதும் காணுகின்ற உண்மைகளையே கீதையிலும் காண்கிறோம். எனவே அக்காலகட்டத்தில் யாரோ ஒரு பெரிய மனிதர், அன்றைய சமுதாயத்திற்குத் தேவை என்று தனக்குத் தோன்றியவற்றை ஒரு நூலாக எழுதி பாரதத்துக்குள் சேர்த்திருக்கலாம்.

குருச்சேத்திரப் போர் நடந்தது என்று கூறுதற்குரிய ஆதாரங்கள் ஏதும் இல்லை. அத்தோடு போர்க் களத்தில் இரு தரப்புப் படைகளும் தம்முள் மோதிப் போர் செய்ய வேண்டிய தருணத்தில், ஞானம், பக்தி, யோகம் பற்றி ஒரு விரிவான விவாதம் எப்படி நடைபெற்றிருக்க முடியும்? கூச்சலும் குழப்பமும் நிறைந்த போர்க் களத்தில், பார்த்தனும் அவனது சாரதியும் பேசிக் கொண்ட ஒவ்வொன்றையும் எவரேனும் குறிப்பு எடுத்தனரா? எனவேதான் குருச்சேத்திரப் போர் ஒரு உருவகக் கதை என்று சிலர் கருதுகிறார்கள்.

அர்ச்சுனனும், ஏனையோரும் வரலாற்று மாந்தரா என்பது பற்றி அய்யப்பட இடம் இருக்கிறது. சதபதப் பிரமாணம் என்பது மிகவும் தொன்மையான நூல். அஸ்வமேத யாகம் செய்த பல பேருடைய பெயர்கள் அந்நூலில் குறிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அர்ச்சுனனும், அவனைச் சார்ந்தோரும் அக்குறிப்பில் காணப்படவில்லை. ஆனால், மகாபாரத்தில் தருமன், அர்ச்சுனன் ஆகியோர் அசுவமேத யாகம் செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

**‘கீதையின் மறுபக்கம்’ நூலிலிருந்து**

# கழக நிகழ்வுகளில் பட்டாசுகளை வெடிப்பது நிறுத்தப்பட்டது!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஆகஸ்டு 18 வரை மத்திய அரசுப் பதவிகளில் குவியும் வடநாட்டு ஆதிக்கம், மத்திய பா.ஜ.க. ஆட்சியின் பார்ப்பனிய சமஸ்கிருத பன்னாட்டு சுரண்டல் கொள்கைகளை விளக்கி பரப்புரைக் கூட்டங்கள் நடத்தவும், மத்திய தேர்வாணையத்தை முற்றுகை யிடும் போராட்டத்தை நடத்தவும் முடிவு செய்யப் பட்டது.

பெரியாருக்கு எதிராக சில தமிழ் தேசிய அமைப்புகள் வரலாற்றுப் புரட்டல்களோடு முன் வைத்த விமர்சனங்களை ஆதாரங்களோடு மறுத்து 'கண்டதைப் படிப்பவன்' என்ற புனைப் பெயரில் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி எழுதிய கட்டுரைத் தொடர் தொடங்கியது ஜூன் மாதத்தில் தான்!

இராஜபக்சே கொழும்பில் நடத்திய காமன் வெல்த் மாநாட்டில், பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்கக் கூடாது என்று வலியுறுத்தி, சென்னையில் அஞ்சலகத் தில் வெடிகுண்டுகள் வீசியதாக தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் உமாபதி, இராவணன், மனோ கரன், மாரிமுத்து ஆகியோர் 8 மாத சிறைவாசத்துக்குப் பின் விடுதலையானார்கள் (ஜூன் 25). மே நாள் பொதுக் கூட்டத்துக்குக்கூட காவல்துறை அனுமதி மறுத்ததால் நீதிமன்றம் வழியாக அனுமதி பெற்று திருப்பூர் கழகத் தோழர்கள் ஜூன் மாதத்தில் மே நாள் பொதுக் கூட்டத்தை நடத்தினர் (ஜூன் 21).

**ஜூலை :** வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி பா.ம.க.வின் சமூக நீதிப் பேரவை தொடர்ந்த வழக்கில் சட்டத்துக்கு ஆதரவாக திராவிடர் விடுதலைக் கழகம் தன்னையும் இணைத்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. கோவை செயலவை தீர்மானப்படி ஒரு மாத பரப்புரை இயக்கம் பழனியில் தொடங்கியது (ஜூலை 15). மத்திய அரசு பணிகளில் வடநாட்டார் குவிக்கப்படு வதைக் கண்டித்து, சென்னையில் உடன்பாடுள்ள அமைப்புகளை இணைத்து கழகம் தேர்வாணைய முற்றுகைப் போராட்டத்தை நடத்தியது. தோழர்கள் கைதானார்கள்.

ஜூலை 17ஆம் தேதி முற்றுகைப் போராட்டம் நடந்த நிலையில், இதற்காக வடமாநிலங்களில் முறைகேடுகள் நடந்ததாக நிறுத்தி வைக்கப்பட் டிருந்த தேர்வுகள் சென்னையில் 20ஆம் தேதி நடக்க இருப்பதாக 19ஆம் தேதி செய்தி கிடைத்தவுடன், தோழர்கள் களமிறங்கினர். அடுத்த நாள் 20 ஆம் தேதி தேர்வு நடந்த திருவல்லிக்கேணி லேடி வெலிங்டன் கல்லூரி முன் தேர்வு நாளன்று முற்றுகைப் போராட்டம் நடத்தி சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் கைதானார்கள்.

ஈரோடு மண்டல கழகப் பொறுப்பாளர் களுக்கான பயிற்சி முகாம் அத்தானியில் சிறப்புடன் நடந்தது (ஜூன் 26, 27). பரப்புரைப் பயணத்தின் ஒரு பகுதியாக ஜூலை 31 அன்று சென்னை ஓட்டேரி பகுதியில் கழகக் கூட்டம் நடந்து கொண்டிருந்த போது ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணியினர் பொதுக் கூட்ட மேடை நோக்கி மறியலுக்கு வந்தனர். மேடை எதிரே எதிர்ப்புக் குரல் எழுப்பினர். கழகத் தோழர்கள் மிரட்டலைச் சந்திக்க தயாரான நிலையில் காவல் துறை தலையிட்டு கூச்சல் போட்டவர்களை அப்புறப்படுத்தியது.

**ஆகஸ்டு:** பரப்புரைப் பயணத்தின் ஒரு பகுதியாக ஆகஸ்டு 16ஆம் தேதி மேட்டுப்பாளையத்தில் நடைபெறவிருந்த கூட்டத்துக்கு காவல்துறை அனுமதி தராமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில் கழக சார்பில் கூட்டத்தின் அனுமதியை உறுதி செய்யக் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப் பட்டது. மனுவை விசாரணைக்கு ஏற்று உயர்நீதி மன்றம் விநாயகர் சதுர்த்தியை காரணம் காட்டி திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுக் கூட்ட உரிமையை தடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டது (ஆக. 9). ஈரோட்டில் கழகத்தின் நிர்வாகக் குழு கூடி பரப்புரைப் பயணம் குறித்த நிறைகுறைகளை விவாதித்தது (ஆக.18). மேட்டூரில் கழகத்தினர் திட்டமிட்ட நாத்திகர் பேரணிக்கு காவல்துறை அனுமதி மறுக்கவே, உயர்நீதிமன்றம் சென்று அனுமதி பெற்று, நாத்திகர் விழா பேரணியை சேலம் மேற்கு மாவட்டக் கழகம் மிகச் சிறப்பாக நடத்தியது. தமிழகம் முழுதுமிருந்தும் விழாவுக்கு கழகத் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர்.

**செப்டம்பர்:** சென்னையில் ஆண்டுதோறும் மதப் பதட்டத்தை உருவாக்கி வரும் விநாயகன் சிலை ஊர்வலத்தை எதிர்த்து இவ்வாண்டும் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தி கைதானார்கள் (செப். 7). கழகப் பொருளாளர் இரத்தினசாமி, செயலவைத் தலைவர் துரைசாமி, பரப்புரை செயலாளர் பிரபாகரன், அறிவியல் மன்றத் தோழர் சிவக்குமார் ஆகியோர் செப். 9 முதல் 24 வரை தமிழகம் தழுவிய பயணம் மேற்கொண்டு கட்டமைப்பு நிதி 'புரட்சிப் பெரியார் முழக்க' ஏட்டுக்கான உறுப்பினர் சேர்க்கும் பணி களில் இறங்கினர் (செப்.9-24). அரசு அலுவலகங் களில் ஆயுத பூஜைகளை நிறுத்தக் கோரி மாவட்டத் தலைநகர்களில் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங் களை நடத்தியது (செப்.29). சொத்துக் குவிப்பு வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான குற்றச்சாட்டை உறுதி செய்த கருநாடக சிறப்பு நீதிமன்றம் 4 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கிய தால் தமிழக முதல்வர் பதவியை ஜெயலலிதா இழந் தார். தமிழக அரசியலில் திடீர்த் திருப்பம் உருவானது.

சென்னை மந்தைவெளிப் பகுதியில் சட்ட விரோதமாக கட்டப்பட்ட நடைபாதைக் கோயிலை அகற்றக் கோரி கழகத் தோழர்கள் எடுத்த முயற்சியால் நடைப்பாதைக் கோயில் அகற்றப் பட்டது. கழக அமைப்புகளால் பெரியார் பிறந்த நாள் விழாக்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்பட்டன.

**அக்டோபர்:** ஆர்.எஸ்.எஸ். 'விஜயதசமி' கொண்டாட்டத்தையும், அதன் தலைவர் மோகன் பகவத் உரையையும், அரசு தொலைக்காட்சி நேரடி ஒளிபரப்புச் செய்த செய்தி கிடைத்த அடுத்த நாளே சென்னை அரசு தொலைக்காட்சி நிலையத்தில் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் முற்றுகைப் போராட்டம் நடத்தி கைதானார்கள். இளம் தமிழகம், தமிழ்நாடு மக்கள் கட்சி உள்ளிட்ட தோழமை அமைப்புகளும் பங்கேற்றன. சென்னை யில் தலைமைநிலையத்தில் கழகத்தின் தலைமைக் குழு கூடி, கழக அமைப்பு முறைகளில் மாற்றங் களைக் கொண்டு வருவதற்கு வசதியாக கழகத் தலைவர், பொதுச் செயலாளர் பதவிகளைத் தவிர ஏனைய பதவிகளைக் கலைப்பது என்று முடிவெடுத்தது.

தீபாவளி நாளன்று, தீபாவளி மறுப்போரின் ஒன்று கூடல் நிகழ்வுக்கு சென்னை மாவட்டக் கழகம், சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம் இணைந்து ஒன்று கூடல் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தன. தீபாவளி மூடத்தனங்களை விளக்கி கருத்துகள் விவாதிக்கப்பட்டன. மூடநம்பிக்கை ஒழிப்பு திரைப்படங்கள் திரையிடப்பட்டன. இனி, கழக நிகழ்வுகளில் குழந்தைத் தொழிலாளர் உழைப்பைச் சுரண்டி சுற்றுச் சூழலைப் பாதிக்கும் பட்டாசுகளை வெடிப்பதில்லை என உறுதி மேற்கொள்ளப்பட்டது (அக்.2). திருச்சியில் கழக செயலவை கூட்டம் கூடி முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியது. பார்ப்பனிய எதிர்ப்பு - ஜாதி தீண்டாமை எதிர்ப்பு, மனித உரிமை, சுற்றுச் சூழல் ஆபத்து, பொருளியல் சுரண்டல், பெண்ணுரிமை, பன்னாட்டு சுரண்டல் என்று பல துறைகளில் பெரியாரியல் பார்வையில் கழகத்தின் கொள்கை மற்றும் அணுகுமுறைகளை முன்வைத்து நிறை வேற்றப்பட்ட இத் தீர்மானங்களை முற்போக்கு அமைப்பினர் பாராட்டினர் (அக். 26).

**நவம்பர் :** திருச்சியில் கூடிய கழகச் செயலவை முடிவின்படி உசிலம்பட்டி விமலாதேவி ஜாதி வெறிக் கொலையைக் கண்டித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் உடன்பாடுடைய அமைப்புகளைத் திரட்டி கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. தமிழகம் முழுதுமிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர்.

கோவையில் வேளாண் பல்கலைக்கழகம் பஞ்சாங்கத்தை அறிவியலாக்கி விவசாயிகளுக்கான வழிகாட்டும் கையேட்டில் இணைத்ததைக் கண்டித்து கோவையில் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடந்தது (நவ.17).

நவம்பர் 26 ஆம் நாள் மேதகு பிரபாகரன் 60ஆவது பிறந்த நாள் வாழ்த்துக் கூறும் பதாகையை மயிலாப்பூர் கழகத் தோழர்கள் நிறுவியதைத் தடுக்க வந்த காவல்துறை, 'புரட்சிப் பெரியார் முழக்கம்' செய்தியாளர், 'முழக்கம்' உமாபதியை தனியாக இழுத்துச் சென்று காவல் நிலையத்தில் வைத்து நடத்திய கொலை வெறித் தாக்குதல் தமிழகத்தையே அதிர்ச்சியடையச் செய்தது. கழகம் நாடு முழுதும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு அவசரமாகக் கூடியது (நவ.29). டிசம்பர் 9ஆம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கூட்டமைப்புச் சார்பில் நடத்த முடிவு செய்யப்பட்டது. தாக்குதலுக்கு உள்ளான 'முழக்கம்' உமாபதிக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளித்து நீதிமன்றத்துக்கு அறிக்கை தரவேண்டும் என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி 10 நாள் பயணமாக 'மாவீரர் நாளில்' பங்கேற்க சுவிட்சர் லாந்து நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டார். புலிகள் பயிற்சி நடந்த மேட்டூர் புலியூர் அருகே வழக்கம் போல் மாவீரர் நாள் நினைவு நாளை கழகத்தினர் எழுச்சியுடன் நடத்தினர். தமிழகம் முழுதுமிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர். புதுவை திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாவீரர் நாள், 'சமர்க்கள நாயகன்' நூல் வெளியீட்டுடன் நடந்தது. சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பிரபாகரன் 60ஆவது பிறந்த நாள் கொண்டாடப் பட்டது. அய்ரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான நீதிமன்றம் 'விடுதலைப் புலிகள்' இயக்கத்தின் மீது விதித்திருந்த தடை செல்லாது என்று தீர்ப்பளித்தது.

ஜாதியை ஒழிக்க பெரியார் அரசியல் சட்டத்தை எரிக்கும் போராட்டம் நடந்த வரலாற்றுச் சிறப்பு நாள்

(4 ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...!

- பகவத் கீதையை காமசூத்திரத்தோடு ஒப்பிட்டு ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன் இழிவுபடுத்துவதா?
  **– இந்து முன்னணி கண்டனம்**

  *வாத்சாயர் எழுதிய சமஸ்கிருத 'இலக்கிய'மான காமசூத்திரத்தை இந்து முன்னணி, இப்படி இழிவு படுத்தலாமா?*

- நோயிலிருந்து குணம் பெற பக்தர்கள் 'பிராமணர்' சாப்பிட்ட எச்சில் இலை மீது உருளும் 'பிரார்த்தனை'யை தடை செய்யக் கூடாது.
  **– உச்சநீதிமன்றத்தில் பார்ப்பனர்கள் வாதம்**

  *அதுக்கு அம்புட்டு சக்தியா? அப்படின்னா, மோடி யிடம் பேசி, இந்த 'எச்சலை'களுக்கு காப்பீட்டு உரிமை வாங்கிடுங்கோ...*

- கிறிஸ்துமஸ் பண்டிகை நாளில் பள்ளிகளுக்கு விடுமுறையை இரத்து செய்து, மனித வளத்துறை அமைச்சகம் உத்தரவு. **– செய்தி**

  *ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை விடுமுறையும் கிறிஸ்துவர்கள் கொண்டு வந்தது தானே! அதையும் இரத்து செய்து பாருங்களேன்...!*

- திருநள்ளாறு சனிப் பெயர்ச்சிக்கு வரும் பக்தர்கள் – அங்குள்ள நளன் குளத்தில் முழுக்குப் போட்டு, கட்டிய ஆடையை குளத்திலேயே விட்டு விடுகிறார்கள். **– செய்தி**

  *முழுக்குப் போட்ட இந்த நாள் முதல் நீ மான மில்லாதவனாக வாழ வேண்டும் என்பதே, இதில் அடங்கியுள்ள அய்தீகம் என்று அறிக!*

- இந்த 65 வயதிலும் காதல் காட்சிகளில் நான் நடிக்க வேண்டும் என்பது 'ஆண்டவனின்' விருப்பம்.
  **– ரஜினிகாந்த்**

  *அப்ப, ஒரு 'ஏ.சி.' தியேட்டரைப் பிடிச்சு சிறப்பு காட்சி ஒன்றை ஏற்பாடு செய்யலாம்ல; ஆண்டவன்களை ஏமாத்தக் கூடாது, சார்?*

- காந்தியை கொன்ற கோட்சவுக்கு சிலை வைப்போம். **– இந்து மகாசபை**

  *வச்சுடலாம்! சம்பூகனைக் கொன்ற இராமனுக்கு பக்கத்திலேயே கோட்சேவுக்கும் வச்சிட்டா, ஜோடிப் பொருத்தம் நல்லாவே இருக்கும்!*

- இந்து மதத்துக்கு பிற மதத்தினர் வருவது மதமாற்றமல்ல; தாய் மதம் – திரும்புவதாகும்.
  **– சங் பரிவார்**

  *சரி திரும்பிடலாம்; அப்படியே தாய் மதத்தின் 'தகப்பன் அட்ரசை' கொஞ்சம் சொல்றீங்களா?*

DATE OF PUBLICATION 24.12.2014 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# 1957; நவம்பர் 26 : ஜாதி ஒழிப்புக்காக சட்டம் எரிக்கப்பட்ட நாள்!

*பொள்ளாச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் நவம்பர் 26ஆம் நாள் கீழ்க்கண்ட சட்ட எரிப்புப் போராட்டத்தை விளக்கும் துண்டறிக்கையை மாணவர்கள்-மக்களிடம் வழங்கினர்.*

பிறவி வருண சாதி ஒழிப்புக்காக பெரியாரும், அவரின் இயக்கமும் நடத்திய சட்ட எரிப்புப் போராட்டத்தின் 57 ஆம் ஆண்டின் நிறைவு நாள் சிந்தனைகள். பெரியார் என்ற அந்த மாமனிதர் தமிழர்களின், உழைக்கும் மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக, மேற்பாட்டிற்காக, எடுத்த போராட்டங்கள் ஏராளம்!

26.12.1926இல் சுயமரியாதை இயக்கம் நிறுவப்பட்ட நாள் முதற்கொண்டு பெரியார் மறையும் நாள் வரையில் "பிறவி வருண சாதி ஒழிப்பில்" நாட்டம் கொண்டிருந்தார். 1929 செங்கற்பட்டு, 1930 ஈரோடு, 1931 விருதுநகர் மாநாடுகளிலும், 1932 "சுயமரியாதை இயக்க சமதர்மம் கட்சி"யாரின் வேலைத் திட்ட க் கூட்டத்திலும், 1940 திருவாரூர், 1944 சேலம், 1945 திருச்சி, 1948 தூத்துக்குடி நகரங்களில் நடைபெற்ற மாநாடுகளிலும் "பிறவி வருண சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு மற்றும் தீண்டப்படாதாருக்குச் சமூக சமத்துவ உரிமை, எல்லாத் துறைகளிலும் முன்னுரிமை பற்றி தவறாமல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

3.11.1957 இல் தஞ்சாவூரில் நடைபெற்ற சிறப்பு நிதியளிப்பு விழாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், "பிறவி வருண சாதி ஒழிப்புக்கான நேரடி போராட்டத்திற்கு ஆணையிட்டது." எப்படி அது நேரடிப் போராட்டம்?

"சதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷடம் குண-கர்ம விபாகச;
தஸ்ய கர்த்தாரமயி மாம் வித்த்யகர்த்தார-மவ்யயம்"
(அத். 4 - சுலோகம் 13) "பகவத்கீதை

நான்கு வருணங்கள் என்னால் உண்டாக்கப்பட்டது; அவரவர்களுக்குரிய கருமங்களை அவரவர் மீறாமல் செய்ய வேண்டும். அதனை மாற்றிச் செயல்பட வைக்க அந்த வருண தர்ம உற்பத்தியாளனாகிய என்னால் கூட முடியாது.

குறைந்தது 1200 ஆண்டுகளாக எல்லா இந்துக்களின் பேரில் சுமத்தப்பட்ட "நால்வருண பிறவி சாதி இழிவுக்கு" - வழக்கம், பழக்கம், சாதி வழக்கம், பிராந்திய வழக்கம், நம்பிக்கை என்ற பெயர்களால் - "நாலு வருண பிறவி சாதி உண்டு" என்பதை 26.1.1950 இல் நடப்புக்கு வந்த இந்திய அரசு அமைப்புச் சட்டம் காப்பாற்றுகிறது. அப்படி காப்பாற்றுவதற்கென்றே எழுதப்பட்டுள்ள இந்திய அரசு அமைப்புச் சட்ட விதிகள் 13, 25, 26, 372 ஆகியவற்றை இந்திய அரசு அமைப்புச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும் என்று இந்திய அரசைக் கோரி நடத்தப்பட்ட அரசு அமைப்புச் சட்ட எரிப்புப் போராட்டம் அது! நேரடியாக - அமைதியாக - தத்தம்மை வருத்திக் கொள்ளும் போராட்டமாக நடந்தது. அந்த சட்ட விதிகளை தமிழாக்கம் செய்து, அச்சுப்போட்டு, அதனை ஊர்தோறும் பரப்பிட பொதுக் கூட்டங்களை நடத்தியது. அதன் பிறகு, 26.11.1957இல் 10,000 பெரியாரின் கருப்புச் சட்டை தொண்டர்கள் இந்திய அரசு அமைப்புச் சட்டத்தை எரித்தனர். அப்படிப்பட்ட ஒரு போராட்டம் அது வரையில உலகில் எந்த நாட்டிலும் நடக்கவே இல்லை!

இந்திய அரசு அமைப்புச் சட்டத்தை எரிப்பது என்ற போராட்டத்தை இந்தியாவில் - தமிழ்நாட்டில் பெரியாரால், பெரியாரின் தொண்டர்களால்தான் முதன்முதலில் நடத்தப்பட்டது. அதுபோலவே சாதியை ஒழிப்பதற்காக இந்தியாவிலேயே பல்லாயிரக் கணக்கான மக்களைத் திரட்டி முதன்முதலாக நடத்தப்பட்ட போராட்டம் - பெரியாரின் இயக்கம் நடத்திய இந்திய அரசு அமைப்புச் சட்ட எரிப்புப் போராட்டம் மட்டும் தான்.

இந்தப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தோழர்கள் கலந்து கொண்ட போதும் - 3,000-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். இதில் முதியோர், நிறைமாத கர்ப்பிணிகள், கைக் குழந்தைகளுடன் பெண்கள், சிறுவர், சிறுமியர் அடங்குவர். இவர்கள் மூன்று மாதம் முதல் மூன்று ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு தமிழ்நாட்டுச் சிறைகளில் அடைக்கப் பட்டனர். சிறைக் கொடுமை காரணமாக சிறைக்குள் அய்ந்து தோழர்களும், விடுதலையான சில நாட்களுக்குள் பதிமூன்று தோழர்களும் மாண்டு போயினர்/

இதோ பெரியார் கூறுகிறார்!!

"நாடார் நாடாரையும்; வன்னியர் வன்னியரையும்; நாயுடு நாயுடுவையும்; அய்யர் அய்யரையும்; முதலியார் முதலியாரையும்; ஆதிதிராவிடர் ஆதி திராவிடரையுமே திருமணம் செய்து கொண்டிருந்தால்! இன்னும் பத்து நூறாண்டுகள் ஆனாலும்!! சாதி ஒழியப் போவதில்லை" (பெரியார், விடுதலை 1.1.1950)

எனவே ஒரு சாதிக்குள் நடக்கும் திருமணங்களை மறுப்போம்! சாதி மறுப்புத் திருமணங்களை வரவேற்போம்!!

**– திராவிடர் விடுதலைக் கழகம், பொள்ளாச்சி மாவட்டம்.**

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் 26 அன்று ஜாதி ஒழிப்புப் போராட்ட வரலாற்றை விளக்கும் துண்டறிக்கைகளை பொள்ளாச்சி மாவட்டக் கழகம் மாணவர்களிடம் வழங்கியது.

**டிசம்பர்:** டிசம்பர் 9ஆம தேதி 'முழக்கம்' உமாபதி மீது கொலை வெறி தாக்குதல் நடத்திய காவல்துறை வன்முறையாளர்கள் இளையராஜா, கலைச்செல்வி, வடிவேலு மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்ய வலியுறுத்தி, தமிழர் வாழ்வுரிமைக் கூட்டணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் சென்னையில் நடந்தது. பல்வேறு கட்சித் தலைவர்கள், இயக்கங்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் பங்கேற்றனர்.


கழக தலைமை செயற்குழு சென்னையில் கூடி, அமைப்புகள் தொடர்பான பிரச்சினைகளை விவாதித்தது. 'புரட்சிப் பெரியார் முழக்கம்' ஏட்டுக்கு உறுப்பினர் சேர்க்கையை தீவிரமாக்க செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டன (டிச.22).

# 'முழக்கம்' உமாபதி தாக்குதலைக் கண்டித்து திருச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்



திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் முழக்கம் உமாபதி மீது காவல் துறையைச் சார்ந்த உதவி ஆய்வாளர்கள் இளையராஜா, கலைச் செல்வி, ஏட்டு வடிவேலு நடத்திய கொலை முயற்சி தாக்குதலைக் கண்டித்தும், அவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்யக் கோரியும் திருச்சியில் கழக சார்பில் டிசம்பர் 10 ஆம் தேதி பகல் 11 மணியளவில் சத்திரம் பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட கழகத் தலைவர் மீ.இ. ஆரோக்கியசாமி தலைமை தாங்கினார். வாழையூர் குணா (புதிய தமிழகம்), பேராசிரியர் முருகையன், தமிழாதன் (விடுதலை சிறுத்தைகள்), வழக்கறிஞர் சுரேஷ் (மா.லெ. மக்கள் விடுதலை), நிலவழகன் (த.ஒ.வி.), குயிலி (ஆதித் தமிழர் பேரவை), ஜெகந்நாதன் மற்றும் சீனி விடுதலை அரசு (த.பெ.தி.க.), அன்பழகன் (பெரியார் பாசறை), இரா. கலிய பெருமாள் (மா.லெ.பொ. கட்சி), வீரமுருகன் (ஆதித் தமிழர் விடுதலை இயக்கம்), துரை தாமோதரன் (பெரம்பலூர் மாவட்ட கழகத் தலைவர்) ஆகியோர் உரை யாற்றினர். தோழர் புதியவன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். கழகப் பொறுப் பாளர்கள் குமார், தமிழ் முத்து, அசோக், மனோகரன், டாக்டர் முத்து, முருகானந் தம், பழனி, வழக்குரைஞர் சந்துரு, சுதாகர், சம்பூகன் உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்றனர். மாவட்ட அமைப்பாளர் குணா நன்றி கூறினார். **செய்தி: மனோகரன்**

# தலைநகரில் கழகம் நடத்திய ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பு கருத்தரங்கம்




தமிழகத்தில் காலூன்றத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ். மத வாதத்துக்கு எதிரான கருத்தரங்கம் ஒன்றை, "ஊடுருவும் பண் பாட்டுத் திணிப்புகள்" என்ற தலைப்பில் சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், நவம்பர் 28ஆம் தேதி நடத்தியது. சென்னை மயிலாப்பூரில் உள்ள கவிக்கோ அரங்கில் நவம்பர் 28 அன்று நடந்த இந்த நிகழ்வில், அரங்கம் முழுவதும் கூட்டம் நிரம்பி வழிந்தது.

வழக்கறிஞர் அருண் அறிமுகவுரையாற்ற, வழக்கறிஞர் திருமூர்த்தி தொடக்க உரையாற்றினார். "ஆர்.எஸ்.எஸ். ஊடுருவல் அரசியலில்" எனும் தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், "வரலாற்றில்" என்ற தலைப்பில் பேராசிரியர் அருணன், "பெண்ணுரிமையில்" என்ற தலைப்பில் வழக்கறிஞர் அஜிதா, "கல்வி மற்றும் மொழியில்" எனும் தலைப்பில் பேராசிரியர் சுப. வீர பாண்டியன் ஆகியோர் பேசினர்.

அனைவரும் தங்களுக்கான தலைப்புகளை முன்னிறுத்திச் சிந்தனையைத் தூண்டும் கருத்துகளையும் வாதங்களையும் முன் வைத்தனர். உரைகள் - காணொளியில் பதிவு செய்யப்பட்டு, குறுந்தகடுகளாக வெளிவர இருக்கின்றன. அரங்கத்துக்கு மறைந்த திராவிடர் இயக்க ஆய்வாளர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் பெயர் சூட்டப்பட்டு இருந்தது. அவரது மறைவுக்கு ஒரு நிமிடம் மவுனம் காத்து இரங்கல் தெரிவிக்கப்பட்டது. தபசி குமரன் நன்றி கூற, நிகழ்வு 9.15 மணியளவில் நிகழ்வு நிறைவடைந்தது. சரியான நேரத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கம் என்றும், இது தமிழகம் முழுதும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் பார்வையாளர்களும் கருத்துரையாளர்களும் கருத்து தெரிவித்தனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 25th December 2014

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN